www.akaram.eu

AKARAM

# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 10.06 திருவள்ளுவர் ஆண்டு 2054

14.02.2023 - 13.03.2023

ISSN : 2195-6480




## வெளிவாசல் இதுதான்

## ரணிலின் தந்திரங்களும், எங்கள் தலைவர்களின் போலித் தனித் தமிழ்த் தேசியமும்!

## இலங்கை அரசைப் புரட்டுமா கனடாவின் இலங்கை தொடர்பான பிரகடனம்?

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

19 ஆம் ஆண்டில்....

**Radio - by - Phone**

ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

**அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!**

# 00 4934 5483411998

**தொலைபேசி இலக்கத்தில்**

## ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்

**00 49 231 700 977 60**

மேலதீக விபரங்களுக்கு... **www.etr.fm**

மகிழ்வுடன்....

அகரம் | அகர தீபம் | ETR NEWS | ETR Music




ortel MOBILE

**Book by SMS**

Are you booking an option for the first time?
Send an SMS with the word
**STARTDATAL to 55300.**

You would like to replenish more internet?
Send an SMS with the word
**STARTSPEEDL to 55300.**

---

**Book by Phone**

Are you booking an option for the first time?
Select **1155**, and enter the following
digits: **8-1-1-1-1.**

You would like to replenish more internet?
Select **1155**, and enter the following
digits: **8-1-5-8-1.**




## + Phone calls to 70 destinations

Internet Flat Highspeed up to 13 GB

National Flat call rate

To all EU countries and 40 other destinations

Internet Flat 13 GB and 250 minutes apply to all EU countries

Carefree calls to all networks in Germany and to 20 other countries

Extend to Smart World XL at any time

Now for 4weeks for "

**19,99€**




## Germany Flat

Now 20 GB instead of 15 GB for the same price

500 minutes from Germany to EU

Carefree calls to all networks in Germany

The "all-in-one package" at a low price


Ideal for frequent callers and all smartphone users

Internet flat rate and minutes packages apply to all EU countries

Neues Highspeed-Volumen can be replenished

Now for 4weeks for "

**24,99€***




## 11 GB Internet Flat

Secure your + 5 GB bonus with the Ortel Mobile app

For tablets & surf sticks


Internet telephony (VoIP) equipped

Internet flat rate applies to all EU countries

Internet telephony available
Surfing the Internet within the EU

Now for 4weeks for "

**19,99€***




**OHNE PAUSE NACH HAUSE.**

Ortel. Wir sprechen Deine Sprache.

Google play | App Store

Aufladbar mit: ortel MOBILE, O2, e-plus




AKARAM
அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine
14 தை 2023 - 13 மாசி 2023
சுவடி / ISSUE 10.06

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)
திரு. கண்ணன் (இந்தியா)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. Box 13 06 31,**
**44316 Dortmund,**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**
Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu



No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.
©ETU e.V. 2014.
All rights reserved.


# நுழைவாயில்...

## அகரம் வாசக அன்பர்களுக்கும் விளம்பரதாரவள்ளல் பெருமக்களுக்கும் வணக்கம்.

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தை இம் மாதம் 4ந் திகதி, சிங்கள பௌத்த இலங்கையின் திடீர் திருட்டு ஜனாதிபதி 400 மில்லின் கடன் வாங்கிக் கொண்டாடினார் என்கிற செய்தி, அவருடைய அறிவின் தரத்தை உலகுக்குப் பறை சாற்றி உள்ளது.

கும்பி, அதாவது “வயிறு கூழுக்கு அழுகிறது, கொண்டை பூவுக்கு அழுகிறதாம்” என்கிற நாட்டார் பழமொழி உள்ளது. அப்படியான வறுமை வாழ்வைக் கனவிலும் அறியாத ரணிலுக்கு, இந்தக் கடன் ஒன்றும் பெரியதல்ல!. நாட்டைக் கடனாளியாக்கி, கொள்ளை அடித்தக் கூட்டத்தின் பிதாமகரான இவர், தனது மருமகன் அரச திறைசேரியில் கொள்ளை அடித்து, மலேசியாவில் பாதுகாப்பாக வாழ வைக்க வேண்டியவராக இருக்கிறார்.

அந்தப் பணம் பற்றிய கவலை, நாட்டு மக்களுக்கே அல்லாமல் இவருக்கு இல்லை. இவரைப் போன்றே நாட்டை அடைவு வைத்துக் கடன் பட்ட பணத்தைக் கொள்ளை அடித்த மகிந்த ராஜபக்ஷ, கோட்டபாய ராஜபக்ஷ குடும்ப உறவினர், நண்பர்கள் அடித்துப் போன பணம் எல்லாம், காற்றில் கரைந்த கற்பூரம் போல் மாயமாக எங்கோ இருக்கிறது.

இவர்கள் மட்டும் அல்ல, எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இப்படிப்பட்ட கொள்ளையர்கள்தான். உண்மைத் தகவல் அறியும் சட்டத்தின் கீழும், வருமானவரி சட்டங்களின் கீழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் விசாரணை செய்யப்பட்டு, தண்டிக்கப் பட வேண்டியவர்களே!.

ஆனால், உலகம் அப்படியான அறம் சார்ந்த நெறியைக் கொண்டிருக்கவில்லை. அதனால் நாம் அன்றாடம்

அறிந்து கொள்ளும் செய்திகள் அத்தனையும் உண்மைகளும் அல்ல! நம்பத் தகுந்தவையும் அல்ல. இதில் இன, மத, தேச வேறுபாடுகள் கிடையாது.

2008 - 2009இல் யார் யார் எல்லாம், எந்தெந்த நாடுகள் எல்லாம் தமிழரின் மனித உரிமைகளையும் உயிர்களையும் கொன்றொழித்தார்களோ, எம் நாட்டின் கனிம வளங்களையும், செல்வங்களையும் எடுத்துச் சென்றார்களோ, அவர்கள் எல்லாம் துக்க வீட்டில் துயரம் விசாரிப்பது போல வருகிறார்கள். கடந்த 14 ஆண்டுகளாக இராணுவ அடக்கு முறைகள், உலக அரசுகளின் உளவு அமைப்புகளின் தமிழ் இன வேட்டை, பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள், கட்டாயப் போதை வஸ்துக்கள் பாவனை, தேர்தல்களில் ஊழல், இலஞ்சங்கள் மூலம்

தமிழின விரோத அரசியலை வளர்த்து, தமிழின அழிப்பையும் சிங்கள, இந்திய, சீன ஆக்கிரமிப்பின் மூலம் தமிழினம் மீண்டும் எழுந்து விடாமல் பார்ப்பதில் கவனமாக உள்ளன.

பயங்கர வாதத் தடைச் சட்டம் இல்லாமலே, தமிழ் இளைஞர்கள் வேட்டையாடப் பட்டார்கள். இப்பொழுதும் வேட்டைகளும், வெள்ளை வான்கடத்தல் கொலைகளும் செய்திகளாக வருகின்றன.

பழைய முகங்களான எரிக் சோல்கைமும், பான் கீ மூனும் கடன்காரத் திருடர்களைச் சந்திக்கிறார்கள். புதிய முகமாக இந்திய வெளி உறவு அமைச்சர் ஜெய்சங்கரும் வந்து போகிறார்.

இவர்களை எல்லாம் பச்சடி போடத் தக்க சீன அதிபரும், அதிகாரிகளும் பொத்துவில் தொடக்கம், பொலிகண்டி வரை, மன்னார் தொடக்கம் அம்பாந்தோட்டை வரை தங்களின் தரிசனங்களைக் காட்டி வருகிறது. இந்த நரிகளில், எந்த நரி நல்ல நரி எனக் கட்டி அணைக்க முடியும்? கீரைக் கடைக்கும், ஒரு எதிர்க்கடை இருந்தால் மக்களுக்கு ஓரளவாவது நன்மை உறுதியாகக் கிடைக்கும். அந்த வகையில் சீனாவை எல்லாரும் கரிச்சுக் கொட்டுவது போல, தமிழ் மக்களும் சீனாவைப் புறந்தள்ள முடியாது.

1960களில் இலங்கை இன்றுபோல மிகப் பெரும் அந்நியச் செலாவணித் தட்டுப்பாட்டில் தவித்தது. அந்த நேரம் வெளி நாட்டு நாணயம் இல்லாமல், பண்ட மாற்று முறையில் இலங்கையின் றப்பருக்குச் சீனா அரிசியை வழங்கி, இலங்கை மக்களின் பசியைப் போக்கியது. மிகப் பழம் காலத்தில் இருந்தே சீன- இலங்கை உறவு சிறப்பாகவே இருந்தது. சீனர்களின் ஜவுளி மற்றும் பல் மருத்துவ நிலையங்கள் யாழ் நகர மற்றும் கொழும்பு வீதிகளில் நிறை இருந்த காலம் 1970 வரை இருந்தது.

இன்று கடலட்டைப் பண்ணைகளில் சீனர்கள் வந்து விட்டார்கள் என, இந்தியாவின் வாடகை வாய்கள் எல்லாம் கூச்சல் இடுகின்றன. ஆனால், இந்தக் கடல் அட்டை வளர்ப்பை 1965 பருத்தித் துறைப் பா.உ. திரு துரைரத்தினம், யாழ் மாவட்ட சபை மூலமாக அறிமுகப்படுத்த முயன்றார். ஆனால், அன்றிருந்த டட்லியின் தேசிய அரசில் பாங்காளிகளான தமிழ் அரசுக் கட்சிக்கும், தமிழ் காங்கிரஸ் கட்சிக்கும் நடந்த இழுபறிப் போரில் அத்திட்டம் காணாமல் போனது.

அன்றிலிருந்தே அத்திட்டம் செயற்பட்டிருந்தால், கடந்த 55 வருட காலத்தில் எத்தகைய பெரிய செல்வத்தை யாழ் மாவட்டம் அரசுக்கு ஈட்டிக் கொடுத்திருக்கும். தமிழர் தலைவர்களும் சரியில்லை, சிங்கள அரசும் சந்தோசமாகத் தமிழரை வேடிக்கை பார்த்தது. அதே காலப் பகுதியில்தான் திரு.துரை ரத்தினம் இஸ்ரவேலில் இருந்து , கொடி முந்திரிகை செய்கையை யாழ்ப்பாண மக்களிடம் அறிமுகப்படுத்தி, யாழ் விவசாயிகள் மிகப் பெரும் கல் வீடுகளையும், செல்வந்த வாழ்வையும் அனுபவிக்கச் செய்தார்.

இன்று சீனக் கம்பனிகள் ஊடாக, கடல் அட்டைப் பண்ணைகள் வடக்கில் வளம் பெறுவதை அரசியல்வாதிகளும், இந்தியாவும் எதிர்ப் பிரச்சாரம் செய்து, அதையும் அழித்து விடப் பார்க்கிறார்கள். சீனாவால் இந்தியாவுக்கு ஆபத்து என்பது உண்மைக் காரணம் என்றால், சீனாவுடன் இணைந்து எங்களை இந்தியா அழித்தபொழுது ஏன் பேசவில்லை?

சீனாவின் தலையீடும், உக்ரேனிய ரஷியப் போரும், ஈழத் தமிழரின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான நல்ல நிரந்தரமான முடிவை ஏற்படுத்தும் சர்வதேச அரசியல் நகர்வுகள் தோற்றம் பெறும் சைகைகள் காணப்படுகின்றன. அதனை மழுங்கடித்து, மடைமாற்றும் திட்டத்துடன் எம்மை ஏமாற்றிச் சென்ற பழைய முகங்கள், இன்று வெறுங்கையால் முழம்போட்டு ஏமாற்ற நினைக்கும் ரணிலை குசலம் விசாரிக்க வருகிறார்கள்.

எங்களுக்கான விடியல் வெளிச்சமாக, கனடிய அரசின் பிரகடனமும், இலங்கை உச்ச நீதி மன்றத்தின் உயிர்த்த ஞாயிறுக் குண்டு வெடிப்புகளின் குற்றவாளிகளான மைத்தரிபால சிறிசேன மற்றும் இராணுவ பாதுகாப்பு அதிகாரிகளின் மீதான பெரும் தொகை, தண்டப் பணங்களும் ஒருபுறத்திலும், அமெரிக்க அரச அதிபர் ஜோ பைடன் அண்மையில் கையெழுத்திட்ட, மனி உரிமை குற்றவாளிகளின் விசாரணை தொடர்பான சட்டமும், எந்த நாட்டவரையும், எந்த நாட்டின் நபர் செய்யும் முறைப்பாட்டை அமெரிக்க மாநில நீதிமன்றங்கள் விசாரித்துத் தீர்ப்பு வழங்கலாம் என அனுமதித்துள்ளதால், எங்களைப் போன்ற கேட்பாரற்ற மக்களும் நீதியைப் பெற முடியும் என்கிற நிலை வந்து விட்டது.

எனவே புதிய விடியலை நோக்கி எமது அரசியல் செயற்பாடுகள் தீவிரம் பெற, நம் மக்கள் எல்லாரும் போராடுவோம். மீண்டும் அடுத்த நுழைவாயிலில் சந்திப்போம்

அன்புடன் விடை பெறும்,

**ஆசிரியர்,** அகரம் குழுமம்

# ரணிலின் தந்திரங்களும், எங்கள் தலைவர்களின் போலித் தனித் தமிழ்த் தேசியமும்!

**த. எதிர்மன்னசிங்கம்**

**தெருவோரப் பிச்சைக்காரனைப் பட்டத்து யானை மாலை போட்டதால், அரசனாகி விடுவான் என்கிற இலக்கியப் பொய் போன்று, ரணில் இலங்கை நாட்டின் அரச அதிபர் மணி மகுடத்தைப் பறிபோக விடாமல் பகீரதன் தவம் போல நாட்டில் வலம் வந்து கொண்டிருக்கிறார்.**

ஆனால், அவரது உயிர் நிலை கடல் நடுவில், கோட்டையில் கிளி வடிவில் ஒளிந்திருக்கும், அரபுக் கதையில் வரும் அரசனின் நிலையாக, எந்த நொடியில் உயிர் பறிக்கப் படுமோ? என்கிற பயத்தில் பார்த்தவர், பின்னால் பதுங்கி வாழும் நிலையில், யாரை எல்லாம் பஞ்ச தந்திரத்தால் வெல்ல முடியுமோ, அவர்களை எல்லாம் அழைத்து விருந்து கொடுத்து, தன் பயத்தை மறைக்க முற்பட்டு வருகிறார்.

அவரை இந்தப் பதவியில் நிறுத்திக் கொள்ள, முதலில் மித்திர பேதம் என்கிற தந்திரத்தை மகிந்த ராஜ பக்ஷ, கோட்டா பாய ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேனா என்கிற முன்னாள் அரச அதிபர்களைப் பயன்படுத்த, சர்வதேச அரசுகளின் புவிசார் சமர் பிராந்திய மைதானத்தில் 2015இல் உருவாக்கப்பட்ட நல்லாட்சி அரசின் பிரதமராக இடம் பெற்றார்.

அந்த அரசை இந்திய தலைமையிலான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பையும், தமிழ் இன அழிப்பையும் 2009, மே மாதத்தில் நடத்திய அரசுகளின் பங்களிப்போடு உருவாக்கியது. அதற்கு முன்னாள் அரசுத் தலைவி சந்திரிகாவின் தயவால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகவும், தமிழ் இன அழிப்புப் போரில் முக்கிய வகிபாகம் தாங்கிய, மகிந்த ராஜபக்ஷவின் ஆருயிர் நண்பனாக விளங்கிய, மைத்திரி பால சிறிசேனாவை, மகிந்த அணியிடம் இருந்து பிரித்து, நாட்டின் ஜனாதிபதியாக்க சந்திரிகா உதவினார்.

இந்தியாவின் கொத்தடிமைகளாகி, தமிழ் இன அழிப்பை நடத்த உதவிய சம்பந்தன், சுமந்திரன் தலைமையிலான தமிழினத் துரோகிகள் துணை நின்றனர். அதனால் தமிழ் இனத்தின் சம்மதமும் கொண்ட அரசாக, அந்த நல்லாட்சி என்கிற துடைப்பக் கட்டை நாட்டை ஆள வைக்கப் பட்டது.

தமிழ் மக்களின் கோரிக்கைகளையும், சர்வதேச தலையீட்டையும், தமிழர் பிரச்சினை தீர்க்க என இந்திய, இலங்கை அரசுகளின் பிரச்சாரம் இலங்கை அரசின் மீதான சர்வதேச அழுத்தங்களைப் பூசி, மெழுகி மூட இந்த ஆட்சி பயன்படுத்தப் பட்டது. அதற்கு வசதியாக தேவையான பாராளுமன்ற ஆசனங்கள் இல்லாத







நிலையிலும், சம்பந்தன் எதிர்க் கட்சித் தலைவராகவும், எதிர்க் கட்சித் தலைவரின் அரச இல்லத்தையும் கூலியாகப் பெற்றார்.

இவற்றை எல்லாம் அவர் அனுபவிக்க உதவியவர் மகிந்த ராஜபக்ஷ . அவருடன் முதல் நாளிரவு அப்பம் விருந்து சாப்பிட்ட மைத்திரி பால சிறிசேனா, மறுநாள் காலை அவரை விட்டு விலகி, அரச அதிபராகி விட்ட நிலையில், சம்பந்தன் அணி மகிந்தவின் அணியாக மாறி, அவரது போர்க் குற்ற விசாரணைகள் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைச் சபை விவாதங்களில் நீர்த்துப் போக உதவினர்.

அங்கே சுமந்திரன் இலங்கை அரசுக்குப் பொறுப்புக் கூறலை கால நீடிப்பைப் பெற்று தப்பிக்க, சுமந்திரன் சிங்கள அரசுக்கு ஆதரவாகச் செயற்பட, சம்பந்தன் இலங்கைப் பாராளு மன்றத்தில் ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தி வைத்த தைத்த ஆடைகளுக்கான வரிச் சலுகையைப் பெறப் பெரிதும் பாடுபட்டார். ஆனால், தமிழ் மக்களுக்கு எதிரான அரசின் எந்த கொடுமையிலும் குறைச்சல் இருக்க வில்லை.

வாரங்கள், மாதங்கள், வருடங்களாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தாய்மார் சகோதர, சகோதரிகள் மழை, வெய்யில் பாராமல் போராடிக் கொண்டிருக்கையில், இவர்களின் நல்லாட்சி நடந்தேறியது. தெருக்கோடியில் ஐ.தே.க. வாழ்நாள் உறுப்பினராக இருந்த சுமந்திரனை, ரணிலுடன் சிங்கக் கொடிப் பிடித்துக் கூத்தாடிய சம்பந்தன், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் இணைத்து, தன் துரோக அரசியலுக்கு வாரிசாக்கிக் கொண்டார்.

2015இல் பிரதமர் பதவிக்கு வந்ததும், ஜனாதிபதியாகிவிட்ட மைத்திரிபால சிறிசேனவைப் பயன்படுத்தி, தனது பல ஊழல்களையும், பிற ஊழல் வாதிகளையும் எந்த வித நடவடிக்கைக்கும் இடம் பெறாமல் ரணில் தடுத்து விட்டார். அவற்றில் ஒன்றுதான் 2019இல் தமிழ் கத்தோலிக்க மக்களைக் கொழும்பிலும், மட்டக்களப்பிலும் நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் பற்றிய நீதி விசாரணைகளும், அவை இடம்பெறாமல் செய்த மைத்திரி பால சிறிசேனாவின் கிறிமினல் குற்றச் சாட்டுகளும். இவற்றைச் சரி செய்ய வேண்டிய பொறுப்பு ரணில் தலையில் விழுந்துள்ளது.

ஆனால், அவரால் செய்யவும் முடியாது, செய்யவும் மாட்டார். காரணம், அவர் இந்தப் பதவியைப் பெற உதவிய மகிந்தாவும், கோட்டபாயாவும், மைத்திரிபால சிறிசேனாவும் இன்று இலங்கை உச்ச நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டக் குற்றவாளிகள். இப்பொழுது தனது பதவியைக் காப்பாற்றுவாரா? மகிந்த கோட்ட பாயா, மைத்திரியைக் காப்பாற்று வாரா?

இதற்கான போராட்டம்தான் அவரது இன்றைய நிலை. கரணம் தப்பினால் மரணம்



என்கிற நிலையில் அவரது இன்றைய அரச அதிபர் பதவி. அதைச் சொந்தமாக்க ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். ஒரு தொகுதி வாக்காளரைக் கூட ஆதரவு இல்லாத கட்சியால் கழட்டி விடப்பட்ட நபரால், எப்படி நாடளவிய தேர்தலில் வெற்றி காண முடியும்? எனவே, அவர் சுப்பற்ற கொல்லைக்குள் எல்லாரையும் வைத்து, கபடியாடித் தப்பிக்க நினைக்கிறார்.

அதன் முதல் கட்டம்தான் "எல்லாரும் வாருங்கோ, 75ஆவது சுதந்திர தினமான பிப்.4ந் திகதி, 2021இல் நாட்டின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் ஒரு தீர்வை முடிவாக எடுப்போம்" என்கிறார். அப்படி என்ன தீர்வை மூடு மந்திரமாக வைத்திருப்பார்? என்பதைக் கண்டுப்பிடிக்க, தன்னைப் போல மற்றவர்களும் முட்டாள்களாக இருப்பர் என நினைக்கிறார் என்பதைக் கண்டுப்பிடிக்க சுப்பர் கம்பியூட்டர் அறிவு தேவை இல்லை என்பதை, எருமை மேய்க்கும் சிறுவனும் அறிவான். ஆனால் இந்த எருமைக்குத்தான் அந்த அறிவு இல்லை.

எங்கள் தமிழ் எருமைத் தலைவர்களுக்குத்தான் அந்த அறிவும் இல்லாமல், ஆளுக்கொரு வியாக்கியானமும், கட்சிக்கொரு கதையுமாக காலத்தை வீணடிக்கின்றனர். அதைத்தான் ரணிலும், சிங்களப் புத்மத வெறியர்களும் எதிர் பார்க்கின்றனர்.

'அவன் கிடக்கிறான் குடிகாரன். எனக்கு ஊத்து கள்ளை' என்பவனைப் போல, உள்ளூராட்சித் தேர்தலுக்கு முண்டி அடித்து கட்டுப் பணத்தைக் கொட்டுகிறார்கள். இதிலே முன்னாள் உச்ச நீதி மன்ற நீதியரசரும் அடங்குகிறார் என்கிற கசப்பான உண்மையும், எமது அறிவின் தரத்தைப் பற்றிக் கவலை கொள்ள வைக்கிறது. இவர்களால் ரணிலின் தந்திரம் வெற்றி காணும்.

அவர்களைச் சொல்லிக் குற்றம் இல்லை, பதவி என வந்து விட்டால் இராணி அப்புக்காத்து செல்வ நாயகமும், பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்காவால் சட்டத்தரணிகள் பதவி ஏற்ற சம்பந்தன் போன்றர்களும், படைத்தவனே தானாக வந்து கூட்டிப் போனால் மட்டுமே, பிடித்தப் பதவியை விடாத குரங்குப் பிடியில் எமது அரசியல் வாதிகள் உள்ளனர்.

'என்று தணியும் எங்களின் சுதந்திர தாகம்! என்று தணியும் இவர்களின் அடிமையின் மோகம்' என்கிற மகாகவி பாரதியின் புலம்பல், ஒப்பாரிதானா எங்களின் வாழ்வின் இராகம்?




AJ
ENTERTAINMENT
PROUDLY PRESENTS

# இளையராஜா
# 80

## LIVE IN GERMANY
## 01.07.2023

+49 (0) 15145459696 (TICKETS)







மனோ.

# இலங்கை அரசைப் புரட்டுமா

## கனடாவின் இலங்கை தொடர்பான பிரகடனம்?

இலங்கையின் எல்லாப் பிரச்சினைகளிலும் ரணிலின் குறுக்குப் புத்தியும், குள்ளத்தனமும் அடிப்படையாக இருந்துள்ளன என்கிற உண்மை, மிகச் சிலரால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

அந்த அளவுக்கு ஒரு பச்சோந்தி போல உடலையும், தோற்றத்தையும் மாற்றும் வல்லமை படைத்தவர். சுருக்கமாகச் சொன்னால் ஒரு வெள்ளை வேட்டிக் கள்ளன். ரணிலின் நடை, உடை, பாவனை அத்தனையும் எவருடைய அறிவுக்கும் என்றுமே எட்டாத புதிர்.

ஒரு புறத்தில் கோட்டு சூட்டுப் போட்ட கனவானாக, வெளி நாட்டு ராஜதந்திரிகள் அரச அதிகாரிகள் மத்தியில் அரசியல் மேதையாகக் கண்ணியமிக்கக் கனவானாகக் காட்டியே எல்லா விதமான குற்றச் செயல்களில் சம்பந்தப் பட்டிருப்பார்.

ஆனால், சாதாரண சிங்களப் பொது மக்கள் மத்தியில் ஒட்டும், உறவும் இல்லாமல் நடந்து கொள்வார். அவரதும், அவரது ஐ.தே.கட்சியும் இன்று எவரதும் விருப்பு வாக்கைக் கூடபெற முடியாத அவலத்தில் உள்ளன. உயர் சாதித் திமிர் படைத்த குடும்பப் பின்னணியைச் சேர்த்த காரணத்தால், மக்கள் ஆதரவைப் பெற்ற பிரேமதாசாவையும், அவரது மகன் சஜித் பிரேமதாசாவையும் ஓரம் கட்டியதால், அந்தக் கட்சியே மக்களால் வெறுத்து ஒதுக்கப்படும் நிலை வந்தது. அதே சமயத்தில் புத்த மதத்தோடு தீவிர அரசியல் செய்யும் இனவாதி.

இந்தப் புத்த மத வெறியைத் தமது கட்சியின் சென்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் "தமிழர் பிரதேசத்தில் 1,000 புத்த விகாரைகளைக் கட்டுவேன்" எனப் பிரச்சாரப் படுத்தியவர். இன்று அந்த வாக்குறுதி, தமிழர் பகுதிகளில் மிக வேகமாக நிறைவேற்றப் பட்டு வருகிறது. கூடவே புத்த மதத் துறவிகளும், மடாலயங்களும், சிங்களப் பொது மக்கள் குடியேற்றங்களும் தமிழரின் வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சிங்களமயமாக்கி வருகின்றன.

இத்தகைய பின்னணியில் உள்ளாட்சித் தேர்தல்களும், போட்டிகளும், கட்சி சிதறல்களும், சிங்கள மக்களின் பலம் தமிழர் பிரதேசங்களில் ஆட்சி, அதிகாரம் கொண்டதாக மாறும் சூழல் உருவாகி விட்டது. மாகாணசபைத் தேர்தல்களும், உள்ளாட்சித் தேர்தல்களும், பாராளுமன்றத் தேர்தல்களிலும் தமிழினமும், தமிழர் நிலங்களும் துண்டாடப் பட்டு இலகுவாக சிங்களர் கரங்களில் சிக்கப் போவது உறுதியாகத் தெரிகிறது.

இத்தகைய கள நிலவரத்தின் பின்னணியில், கனடிய அரசைத் தமிழ்



மக்களின் மனித உரிமை மீறிய குற்றச் சாட்டில், தமிழ் ஈழ விடுதலைப் போரின் இறுதிக் கட்டத்தில் பொறுப்பாகச் செயற்பட்ட இலங்கை அரச அதிபர்கள் மகிந்த ராஜபக்ஷ, கோட்ட ராஜபக்ஷ மற்றும் இராணுவத் தளபதிகளைச் சர்வதேசப் போர்க் குற்றமன்றுகளில் விசாரிக்கப் பட்டு, தண்டிக்கப்பட வேண்டும் எனப் பிரகடனப் படுத்தியதோடு, அவர்களைக் கைது செய்ய வேண்டும் எனவும் உலக அரசுகளைக் கேட்டுள்ளது. அவர்கள் கனடாவுக்குள் பயணிக்கத் தடை செய்யப்படுவார்கள். முன்னதாகவே அமெரிக்கா குற்றம் சாட்டப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்குப் பயணத் தடை விதித்து விட்டது.

இரண்டாவது இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அதிர்ச்சியாக, இலங்கையின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பினால் 2019 உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் விசாரணைகள் தொடர்பாக, முன்னாள் அரச அதிபர் மைத்திரிபால சிறிசேனாவும், பல உயர் அரச அதிகாரிகள் குழுகளும் தண்டிக்கப்பட்டு, தண்டப் பணம் விதிக்கப்பட்டமை அமைந்து விட்டது.

இதன் மூலம் முன்னாள் அரச அதிபர்களுக்குப் பதவிக் காலத்தின் பின்னரும் வழங்கப் பட்ட சட்டப் பாதுகாப்பும், செயலற்றதாக்கப் பட்டு விட்டது. எனவே, சட்டப் பாதுகாப்பு என்கிற வரப்பிரசாதம், பதவி இழந்த பின்னரும் அனுபவிக்கும் உரிமை இல்லாமல் ஆக்கப்பட்டு விட்டது. இதனால் மடை திறந்த வெள்ளம் போல நீதி விசாரணைகளும், தண்டனைகளும் வருங்காலத்தில் பெருகும் வாய்ப்புகளும் உள்ளன.

இதில் இருந்து தப்பிக்கவே, இலங்கை அரசு தென்னாபிரிக்காவில் நடந்தது போன்ற இன நல்லிணக்கச் சபை மூலம் தீர்ப்பது பற்றி, இலங்கை அரசு முற்படுவதாக செய்திகள் வருகின்றன. ஆனால், அங்கே நடந்த வெள்ளை இனவெறி ஆட்சியாளர்கள் பகிரங்க மன்னிப்பும், மக்களிடையே நடத்தப்பட்ட விவாதங்கள், உரையாடல்கள் போன்ற எதனையும் ஆரிய சிங்கள புத்த இனவெறி கொண்ட இலங்கையில், எக்காலத்திலும் இடம் பெறப் போவதில்லை. அதனால் சர்வதேச அரசுகளும், அரசு சாரா மனித உரிமைத் தொண்டு அமைப்புகளும் அடுத்த கட்டமாக, இப் போர்க் குற்ற சந்தே நபர்களைக் கைது செய்து, நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் தண்டிக்கப்படுவதும் உறுதி.

கனடிய அரசின் இச்செயல் அங்குள்ள ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பலத்தாலும், அழுத்தங்களாலும் வெற்றி கரமாகக் கனடிய அரசை உசுப்பியது என்றாலும் கூட, ஏனைய மேற்கத்திய அரசுகளைத் தூண்டும் அளவுக்கு ஈழத் தமிழர்களின் அரசியல் இப்படியான முடிவுகளை ஏற்படுத்தப் போதிய அளவு இல்லாமல் இருக்கலாம். ஆயினும் எல்லா மேலை நாடுகளும் மனித உரிமைகள் நிலைநாட்டுவதில், சர்வதேச நீதி பரிபாலனத்தை ஆதரிக்கின்றன.

இதன் அர்த்தம், அந்த நாடுகளின் தனி நபரால், அவர்களின் அரசை இது போன்ற நடவடிக்கைகளை எடுக்கச் சொல்லி, உலகின் எந்த நாட்டின் மனித உரிமை மீறல்களையும் விசாரணை செய்யக் கோர முடியும். கனடிய




*அரசின் அறிவித்தலை தமது முறைப் பாட்டுக்கான அடிப்படை ஆதாரமாக பயன்படுத்த முடியும். இப்படியான கருத்துகளை இலங்கையின் பேராசிரியர் கலாநிதி ஜெகான் பெரேரா கொழும்பு ரெலிகிராஃப் வலைத் தளத்தில் கூறி உள்ளார். மிக அண்மைக்கால மாற்றமாக ரஷிய உக்கிரெயின் போர் தொடர்பாக, அமெரிக்கா தனது சட்டத்தை சர்வதேசச் சட்டங்களோடு இணைத்து, அமெரிக்கா மனித உரிமை மீறல் பேர்வழிகளுக்கு ஒரு பாதுகாப்பான அடைக்கலம் என்கிற நிலையைத் தடுத்து விட்டது.*

*இந்த மாதம் அமெரிக்க அதிபர் ஜோசப் பைடன் ஒரு புதுச் சட்டத்துக்கு ஒப்பம் இட்டுள்ளார். இந்தப் புதிய சட்டம் அமெரிக்க மாநில அரச நீதிமன்றங்கள், சர்வ தேச மனித உரிமை மீறல் சந்தேக நபர்களை எதிராளியோ, பாதிக்கப் பட்டவரோ எந்த நாட்டைச் சேர்ந்தவராயினும் விசாரணை செய்து தண்டிக்க அனுமதி வழங்குகிறது.*

*இலங்கையைச் சேர்ந்த பல அமெரிக்க குடும்பங்கள் தங்கள் சொத்துகளையும், குடும்பங்களையும் பாதுகாப்பாக வைப்பதற்கு அதிகம் பயப்படும் நிலை உருவாகி உள்ளது. அமெரிக்க அரசின் சட்டத் திருத்தம் கனடிய அரசின் அறிவித்தலால் ஏற்பட்டது எனலாம்.*

*பிரபல சிங்கள ஊடகவியலாளர் லசந்த விக்கிர துங்க கொலை வழக்கு மற்றும் பல மனித உரிமை மீறல் கொலை வழக்குகள், மீண்டும் ராஜ பக்ஷேக்கள், கோட்ட பாயாக்களின் தூக்கத்தைக் கெடுக்கும் நிலை உருவாகி விட்டது.*

*சர்வதேச அரசுகளின் இழுபறிகளால் இன்னும் சில வருடங்கள் இவை நடந்தேற தேவைப் படலாம். ஆனால், சிங்கள இன வெறி அரசுகளின் கழுத்தில் சுருக்குக் கயிறு விழுவது உறுதி. அதற்கும் எம் அரசியல் தலைவர்கள் எவ்விதத்திலும் துணை போய் துரோகிகள் ஆகாமல் செய்வது, எமது பொது நல அமைப்புகளும், அரசியல் செயற்பாட்டாளர்களும் மிகுந்த அர்ப்பணிப்போடு தமிழ் மக்களுக்கான நீதியையும், தமிழரின் பூர்வீகத் தாயகத்தையும் 1830க்கு முன்னரான நிலைக்கு மீளப் பெறுவதே எமது ஒரே இலட்சியமாகக் கொண்டு போராடிப் பெறவேண்டும். எமது மாவீரர்களும், மக்களும் இன்னுயிர்களைத் தியாகம் செய்து போராடியதன் ஒரே இலக்கும், இலட்சியமுமாக ஒவ்வொரு தமிழரும் இறுதி வெற்றி வரும் வரை செயற்படவேண்டும்.*

*'தமிழரின் தாகம், தமிழ் ஈழ சுதந்திரத் தாயகம்.'*




# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

மொத்தமாகவும்,
சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை
விற்பனை செய்ய
விரும்புவோர்
தொடர்புகொள்ளுங்கள்

25
ஆண்டுகளாக
உங்களோடு நாங்கள்...

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்
தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்




www.jaffnastores.com
info@jaffnastores.de

Tel. - 0521 174794
Mobile - 01732807906

**Feilenstraße 8
33602 Bielefeld**



அவதானி



# உளவு நிறுவனங்கள்

உலகிலுள்ள தெண்ணூற்றொன்பது வீதமான நாடுகளுக்கு இந்தியாவின் மீது பெரு விருப்பமும், நல்ல அபிப்பிராயமும் உண்டு. அதற்குக் காரணம் பல்லின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மொழி,பண்பாடு, கலை, உணவுப் பழக்க வழக்கங்கள் போன்ற இன அடையாளங்களை ஒருங்கிணைக்கும் ஒரு சனநாயக நாடாக மட்டுமல்ல, ஆன்மீகத் தளத்தில் கட்டியெழுப்பப்படும் நாடாகவும் இந்தியா இருந்து வருவதும் மிக முக்கிய காரணங்களாகும்.

அறவழியில் போராடி, இந்தியாவுக்குச் சுதந்திரத்தை மகாத்மா காந்தி பெற்றுக் கொடுத்ததால், மகாத்மா காந்தியை அறவழித் தந்தை என்று முன்னுதாரணப்படுத்தி, உலகு வாழ் சாதாரண மனிதர்களிலிருந்து எழுத்தாளர்கள், அரசியலாளர்கள் வரை பேசியும், எழுதியும் வருவதுடன், தமது நாடுகளில் மகாத்மாவின் சிந்தனையை தமது அரசியல் அலகுகளில் சேர்க்குமளவிற்கு இந்தியாமீது பெரும் மதிப்பையே உலக நாடுகள் வைத்திருக்கின்றன.

புத்தரின் காருண்ய போதனைகள் உலக நாடுகளில் குறிப்பாக, மேற்கத்தைய நாடுகளின் கவனத்திற்குட்பட்டு வருகின்றன. யோகா என்ற இந்திய உடற்பயிற்சிக் கலை மேற்கத்திய நாடுகளில் குறிப்பாக ஜேர்மனியச் சில பல்கலைக் கழகங்களில் தனித்துவமான பாடமாகவும், செயல்முறை பாடமாகவும் இருந்து வருவது மட்டுமல்ல, யோகா என்னும் உடற்பயிற்சிக் கலை மேற்கத்தைய உடற்பயிற்சிக் கலைக்கு நிகராக மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருவதையும், மருத்துவர்களே யோக முறையிலான உடற்பயிற்சியைச் செய்யுங்கள் என பரிந்துரைக்கும் அளவுக்கு அக்கலை ஜேர்மனியில் வெகு வேகமாக பரவி வருகின்றது.

மேற்கத்தைய நாடுகளின் பொதுநூல் நிலையங்களில் இந்தியா பற்றியதும், அங்குள்ள பல்லினச் சமயம் சார்ந்த, ஆன்மீகம் சார்ந்த, பண்பாடு கலை வடிவங்கள் சார்ந்த, உணவுப் பழக்க வழக்கங்கள் சார்ந்த இன்னும் யோகா உடற்பயிற்சி நூல்கள் என இந்தியா சார்ந்த நூல்கள் அந்தந்த நாட்டு மொழிகளிலேயே இருக்கின்றன.

ஒரு நாட்டினுடைய இரகசியங்களை அறிந்து கொள்வதற்கு, உளவு நிறுவனங்கள் முதலில் அந்நாட்டு மக்களின் விருப்பு, வெறுப்புகளையே அறிகின்றன. தனது நாட்டினைப் பற்றி உளவு பார்க்கவிருக்கும் நாட்டு மக்களை, தமது நாட்டை நோக்கி வியப்புடனும், விருப்புடனும் பார்க்கும் நிலையை ஏற்படுத்தி விடுகின்றன.

இரண்டு விதமான அணுகுமுறையை அதாவது, ஒரு நாட்டுக்குள் ஊடுருவும் உளவு நிறுவனங்கள் கடைப் பிடிக்கும். தமது நாட்டைப் பற்றி ஊடுருவியுள்ள நாட்டு மக்களின் மனதில் நல்ல

அபிப்பிராயத்தை ஏற்படுத்துதல். இரண்டாவது, ஊடுருவியுள்ள நாட்டு மக்களின் குணாம்சங்கள், பழக்க வழக்கங்கங்கள், பண்பாடு, உணவுப் பழக்க வழக்கங்கள், உளவியல் பலம், பலவீனம் போன்றவற்றை நுண்பெருக்கிக் கண்ணாடி ஊடாகப் பார்ப்பது போலப் பார்த்து, அந்தந்த நாட்டு மக்களைத் தெளிவாகவே எடை போட்டு விடுவார்கள்.

ஒரு நாட்டு அரசின் பலம் பொருந்திய வேராக இருப்பது, அந்நாட்டு மக்களே!. அந்த நாட்டு மக்கள் தமது நாட்டின் மீது கொண்டுள்ள பற்றுமிகு நல்லபிப்பிராயமே, அந்த நாட்டின் நிலைநிறுத்தமான ஆட்சிக்கு அத்திவாரமாக இருக்கும். நாடு என்ற பெரும் அசையாத மரத்திற்கு வேராக இருப்பவர்கள் மக்களேதான்!. அந்த மக்களின் மனங்களை வெல்வதே உளவு நிறுவனங்களின் முதல் வேலை.

இன்றளவும், உலக நாடுகள் அமெரிக்காவை அரசியல் தொட்டு, விஞ்ஞானம் வரை நிராகரிக்க முடியாமலும், அவர்கள் செல்லும் வழித்தடத்தில் செல்வதற்குக் காரணம், அந்நாட்டினைப் பற்றித் தினம் தினம் செய்திகளாக வரும் பல பிரமிப்பான விஞ்ஞானக் கண்டுப்பிடிப்புகள், உலகெங்கும் பரவியிருக்கும் அவர்களின் உணவு நிறுவனங்கள், காம உணர்வுகளை வளர்த்தெடுக்கும் பாலியல் படங்கள், பிரமாண்டமான திரைப்படங்கள், அறிவியல் நூல்கள், அமெரிக்காவின் முப்படைகள் பற்றிய செய்திகள், பென்ரகன் என்ற இராணுவத் தலைமையகம் என்பனவையும் ஆகும். உலக நாடுகளின் அரசியலைத் தீர்மானிக்கின்ற அதற்காக எவரையும் பணம், பெண், பொருள் என்பவற்றால் வாங்க முடியும் என்ற தனிமனித உளவியல் போக்கு போன்றவற்றை அக்கு வேறு, ஆணி வேறாக அறிந்து வைத்திருக்கின்ற அனைத்துந்தான் உலகில் தன்னிகரில்லாத நாடாக அமெரிக்காவை உலக மக்கள் கொண்டாடக் காரணம். என்ன இருந்தாலும், அமெரிக்காவைப் போல இருக்க முடியாது என்று உலக மக்கள் உதிர்க்கும் வார்த்தைகளே, அமெரிக்காவின் பெரும் பலமாகும்.

உலக மக்களின் இத்தகு அபிப்பிராயமே, அமெரிக்காவின் சிஐஏ என்ற உளவு நிறுவனம் உலக நாடுகள் எங்கும் காற்றுப் போல நிறைந்திருக்கக் காரணம். இருநூறு ஆண்டுகால சரித்திரம் கொண்ட அமெரிக்கா, பலவாயிரம் இருப்புநிலை கொண்ட பல நாடுகளை அதுவும் விஞ்ஞானத்தையும், எழுத்து வடிவினையும், அறிவியலையும், மருத்துவத்தையும், தத்துவங்களையும் கொண்ட பல நாடுகளை முந்திக் கொண்டு நிற்கின்றது. எப்பொழுதும் அபிப்பிராயம், கருத்து, எண்ணம் என்பவை ஒரு மனிதனைப் பற்றி எடை போடுவதற்காயினும் சரி, ஒரு நாட்டைப் பற்றி எடை போடுவதற்னகாயினும் சரி, அதுவே முதல் நகர்வின் அடியாகும்.

நிலப் பரப்புச் சார்ந்து ஐந்து கண்டங்களையும் விளித்தழைக்கையில் இந்தியப் பெருங் கண்டம் என்றழைக்கும் பெயருக்குக் காரணம், இந்தியாவைச் சுற்றியுள்ள நாடுகளையும் சேர்த்தே அவ்வாறு அழைக்கப்படுவதாயினும், இந்தியாவை முன்னிறுத்தியே அழைக்கப்படுகின்றது.

பலவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, சீனாவைத் தவிர்த்து இந்தியாவின் அயல்நாடுகளாகவும், அதற்கடுத்த



நாடுகளாகவும் இருந்தவை யாவும், இந்தியாவோடு இணைந்தொரு நாடாகவே இருந்தவையாகும்.

ஒரே துறைசார் கல்வியை, ஒரே பல்கலைக் கழகத்தில் படித்த இந்திய அறிஞர் ஒருவரின் நடத்தைக்கும், அவர் கற்ற துறைசார் கல்வி அணுகுமுறைக்கும், அமெரிக்க அறிஞர் ஒருவரின் நடத்தைக்கும், அவர் கற்ற துறைசார் கல்வி அணுகுமுறைக்கும் இடையில் பாரிய வேறுபாடுகளைக் காண முடியும்.

இந்தியா ஒரு ஆன்மீக நாடாக இருந்த போதும், உயிரினங்களால் அதுவும் மனித உயிரினத்தால் தவிர்க்க முடியாத, தவிர்க்கக் கூடாத வெளிப்பாடாக உடலோடு ஒன்றிந்த வெளிப்பாடாக இருப்பது காம உணர்வேயாகும். அமெரிக்காவிலிருந்து வகைதொகையாக வெளிவந்து கொண்டிருக்கும் நீலப் படங்கள் என்றழைக்கப்படும் பாலியல் படங்களுக்கு, உண்மையான சொந்தக்கார நாடு அமெரிக்கா அல்ல, அதற்கு உரிமை கொண்டாடக்கூடிய உரிமை இந்தியாவுக்கே உண்டு.

இந்திய மருத்துவ ஞானிகளும், சித்தர்களும், யோகிகளும் மருத்துவக் குறிப்புகளில் தாம்பத்திய உறவு பற்றியும், ஆண்-பெண் உடலுறவு பற்றியும், அவற்றின் பல்வேறு முறைகள் பற்றியும், உடலுறவு உடல் நலத்தைப் பேணும் மருத்துவத் தன்மை கொண்டது என்பது பற்றிய பல காம நூல்களை உலகிற்கு கொடுத்திருக்கின்றனர்.

இத்தகைய ஒரு நாடு, தனது ஊடுருவல் உளவு நிறுவனமான றோவை எவ்வாறு கட்டமைத்திருக்கும்? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஒரு உளவு நிறுவனம் என்பது, அத்துறைசார் பட்டப்படிப்பினையும், கலாநிதிப் படிப்பினையும் கொண்டதாக இருக்கும். இரகசியங்களை வலை போட்டுத் தேடும் கல்வியைத்தான் பெற்றிருக்கும் என்று தீர்மானித்துவிட முடியாது. கல்வி அலகுகளில் எவை எவை இருக்கின்றனவோ, அவை அத்தனையையும் படித்தவர்கள் இந்திய உளவு நிறுவனத்தில் மருத்துவர்கள், பொறியிலாளர்கள், வணிக நிறுவனத்தார், விளையாட்டுத்துறை வீரர்கள் என அனைவருமே அங்கம் வகிப்பார்கள்.


(தொடரும்)




# TR Bati

**Professionnelm, Fiable, Pileàíheure**

நிபுணத்துவம், நம்பகத்தன்மை, குறித்த நேரத்தில்
அனைத்து வீட்டுவேலைகளும் செய்து கொடுக்கப்படும்.



**+33 6 52 46 48 59**
**+33 6 52 60 29 06**

1 Allée Pierre de Ronsard
77200 Torcy
France

www.trbati.fr

- Rénovation — சீரமைப்பு
- Plomberie — தண்ணீர் குழாய் இணைப்பு
- Électricité — மின்சார வேலை
- Charpenterie — தச்சு வேலை
- Carrelage — மார்பிள் பதித்தல்
- Parquet — பலகை பதித்தல்

சேதுராமலிங்கம்

**சென்ற மாத தொடர்ச்சி...**

**நா**ம் சிந்திப்பது பகுத்தறிவிற்காக அல்ல, உண்மையைத் தேடுவதற்கும் அல்ல. அறிவியல் என்பது உண்மையைத் தேடுவது அல்ல. இன்றைய அறிவியல் தத்துவங்கள் புதிய கண்டுபிடிப்புகளால் தவறாகலாம். அறிவியலின் உண்மையான நோக்கம் என்பது, நமது உணர்வுகளை அமைதிப் படுத்தவதே என்கிறார் ஆடம் சுமித்து.

எப்பொழுது நாம் உணரும் சிக்கல்களைத் தீர்க்கிறோமோ, அப்பொழுதுதான் மனம் அமைதி ஆகும். அறிவியலாளர்களின் உண்மையான நோக்கம் என்பது, மனதை அமைதிப் படுத்துவதே. அனைத்து சிக்கல்களும் அனைவரிடமும் ஒரே உணர்வுகளை உருவாக்குவதில்லை. எது போன்ற உணர்வுகள் உருவாகின்றன? என்பது ஒருவரின் மூலத்தைப் பொருத்தது. 'மூலம்' என்பது ஒருவரின் அடையாளம், தான் யார்? என்று உணர்வது. அதுதான் அவர்களை இயக்குவது. காட்லாந்தின் அறிவொளிக் காலத்தை எது உருவாக்கியது? என்பதற்கான விடையை 'சுகைவெள்வேசு' கண்டறிந்துக் கூறுகிறார். அவர் கூறுவது, "காட்லாந்து தனது சுதந்திரத்தை இழந்து, இங்கிலாந்திடம் அடிமையானது. அந்த அவலத்தின் வழியாக எழுந்த போராட்ட உணர்வுகள் அவர்களைத் தூண்டி இயங்க வைத்தது" என்கிறார். இதை இயூமின் தேசியவாத சிந்தனையிலும் காணலாம்.

அடிப்படையில் ஒரு சமூகம் அறிவிற் சிறந்த சமூகமாக மாறுவதற்கு பகுத்தறிவு முதன்மையானது அல்ல, தயனிசியன் உருவாக்கும் உணர்வுகள்தான் முதன்மையானது. யூதர்களின் சாதனைகளுக்கு அவர்களின் மினி காரணமல்ல, அவர்களின் பண்பாட்டின் வழியாக வரும் தயனிசியன்தான் காரணம்.

இன்றைய தமிழ்ச் சமூகத்தை அறிவியல் கற்பித்து, பகுத்தறிவை வளர்த்து, அறிவிற் சிறந்த சமூகமாக மாற்றிவிடலாம் என்று கருதுவது பிழையானது. பல பொறியியலாளர்களை, மருத்துவர்களை உருவாக்கலாம், ஆனால் சமூகத்தின் சிந்தனை பெரிதாக மாறாது. கல்வி ***(Education)*** வேறு, கற்றலும் சிந்தனையும் ***(learning and thinking)*** வேறு. அடிப்படையில் நாம் அறிவார்ந்த சமூகமாக மாறுவது என்பது, சமூகத்தின் மூலத்தை / பண்பாட்டை மாற்றுவதில்தான் தங்கி இருக்கிறது.

அது பிரபாகரன் என்ற தயனிசியனில் இருக்கிறது. புலிகளுக்குக் குறைந்த வளங்களே இருந்தாலும், அவர்கள் போர் உத்திகளில் அறிவில் முன்னோடியாக இருந்தார்கள் என்பதை, பிரபாகரன் சட்டகத்தில் ஏற்கனவே பார்த்தோம். இதெல்லாம் தயனிசியின் உணர்வுகளில் இருந்து வந்தவை.

நான் ஏன் எழுதுகிறேன் என்பதுகூட, பிரபாகரன் உருவாக்கிய தயனிசிய உணர்வுகளில் இருந்துதான் என்று என்னால் புரிந்து கொள்ள

# தமிழினத்தின் தயனிசியன் பிரபாகரன்



முடிகிறது. நான் புலிகளை ஆராய்ந்து, கற்று, எழுதுவது எல்லாம் 2009இற்குப் பின் எழுந்த உணர்வுகள்தான். நான் இப்படி எழுதுவேன் என்று நான் நினைத்தது இல்லை. எனது ஆற்றல், என்னிடம் இல்லை என்பதுதான் உண்மை. "ஒரு வரலாற்று ஆய்வாளரின் மூளையைத் தோல்வியைப் போன்று வேறு எதுவும் கூர்மையாக்க முடியாது" என்கிறார் வரலாற்று ஆய்வாளர் ஆப்சுபாம். அவரே அந்த உணர்வுகளின் உதவியால்தான் சிறந்த வரலாற்றாய்வாளர் ஆனார். போர் வெற்றியில் முடிந்தால், விளக்குவது எளிது. ஆனால், பின்னடைவு ஏற்பட்டால் அதை விளக்குவதற்கு ஆழ்ந்த ஆராய்ச்சி தேவைப்படும். முடிவில் பின்னடைவு அடைந்த பக்கம்தான் புரிதலில் வெற்றி உலகப் புகழ்பெற்ற முதல் வரலாற்று நூல் என்பதே பெலோப்பினீசியப் போரில் தன்னுடைய நாடான ஏதென்சு ஏன் தோல்வி அடைந்தது? என்று துசிடிடீசு ஆராய முற்பட்டதன் விளைவுதான். அந்நூல் இன்றும் போற்றிப் புகழப்படுகிறது.

சப்பானின் போருக்குப் பின்னரான காலத்தில், எதிர்காலத்தில் சப்பான் எவ்வாறு இருக்கவேண்டும்? என்பதை வடிவமைத்தவர்களில் மூன்று அறிவு சீவிகள் முக்கியமானவர்கள். இவர்கள் மூவரும் போர் தோல்வி அடைந்த நாள் அன்று அழுது, புலம்பி நடைப் பிணமாகத் திரிந்தவர்கள். அவலத்திலிருந்து சப்பானை எவ்வாறு மீட்டெடுப்பது? என்பதுதான் அவர்கள் எடுத்துக்கொண்ட வேலை. தோல்வியைப் போன்று மனித மூளையை கூர்மையாக்கும் சக்தி, வேறெதுவும் இல்லை. துசிடிடீசு, பிளேட்டோ, மாக்கியவளி, மார்க்சு, கிராம்சி, லெனின், டிராட்சுகி வரை தோல்வியின் வேதனைகளை உணர்ந்தவர்கள்.

இன்னொரு உதாரணமாக, நாடுகள் எவ்வாறு தோன்றி, அழிகின்றன? என பார்ப்போம். எவ்வாறு இன அடையாளம் தோன்றுகிறது, நாடுகள், பேரரசுகள் தோன்றி, அழிகின்றன? என்பதை உலக வரலாற்றை ஆராய்ந்து "உயர் அடையாள எல்லை தத்துவம்" ***(Metaethics Frontier theory)*** என தத்துவப்படுத்தி விளக்குகிறார்






பீட்டர் தர்ச்சின். இதன் அடிப்படையில், "எங்கே வெவ்வேறு உயர் அடையாள வேறுபாடுகள் கொண்ட குழுக்கள் மோதுகின்றனவோ, அங்கே இனங்கள் பிறக்கின்றன" என்கிறார்.

உதாரணமாக வெள்ளையர்கள் தெற்காசியாவை ஆண்ட பொழுது, அவர்களை இங்கிருந்த மக்கள் அனைவரும் எதிர்த்தனர். அதன் கூட்டு விளைவாக "இந்தியர்" என அடையாளம் பிறப்பெடுத்தது. அதற்கு முன்பு அப்படிப்பட்ட அடையாளம் இல்லை. பின்பு இந்துகளுக்கும், இசுலாமிய உயர் அடையாளங்களுக்கு இடையேயான போர்களினால் "பாக்கிசுத்தானியர்" என்ற அடையாளம் தோன்றியது. 'இந்து' என்ற அடையாளம் கூட, அப்பொழுதுதான் தோற்றம் பெற்றது என்றும் கூறலாம்.

பீட்டர் தர்ச்சின் கூறுவது என்னவென்றால் "எங்கு மோதல்கள் ஏற்படுகின்றனவோ, அங்குதான் ஒற்றுமை ஏற்பட்டு, அடையாளங்கள் உருவாகின்றன" என்கிறார். போரினால் ஏற்படும் இந்த ஒற்றுமை, கூட்டு செயல்திறனை அசபியா *(Asabiyya)* என்கிறார். "இந்த முறையில்தான் இன்றைய நாடுகளான இங்கிலாந்து, ஸ்பெயின், பிரான்சு, போலந்து, அன்றைய ஆட்டமான் பேரரசு, ரசியா ஆகியன உருவாகின" என்கிறார்.

இந்நாடுகள் எல்லாம் அவை தோன்றிய காலத்தில் பல்வேறு மக்களைக் கொண்டவை. போரின் விளைவாக உருவான அசபியாவால், அம்மக்கள் இணைந்து, ஒரு அடையாளமாக மாறினர். உதாரணாமாக பிரான்சில் 1860 காலவாக்கில் கூட, பிரஞ்சு மொழி என்பது ஒரு சிறுபான்மை மொழியாக இருந்தது.

எப்பொழுது போர் நடக்கிறதோ, அங்கு அசபியா கூடி, இன அடையாளம் உருவாகி, வலுப்பெறுகிறது. எந்த இனங்களின் அசபியா குறைகிறதோ, அவை காலப்போக்கில் வலுவிழந்து, அழிகிறது. பேரரசுகளின் எல்லைப்புறங்களில் போர் நடப்பதால், அங்கே அசபியா அதிகமாக இருக்கும். பேரரசுகளின் உள்ளே போர் இல்லாததால், அம்மக்களுக்கு அசபியா குறையும். முடிவில் எல்லைப் புறத்தில் உள்ள ஏதாவது ஒரு மக்கள் கூட்டம், அதிக அசபியா உருவாகி, வலுப்பெற்று அப்பேரரசை வீழ்த்துகிறார்கள். இவ்வாறுதான் ரோமப் பேரரசு வீழ்ந்தது.

இதைக்கொண்டு இன்றைய நமது அரசியல் சூழ்நிலையைப் புரிந்து கொள்ளலாம்.

1. இந்துத்வா நூறாண்டுகளுக்கு மேலாக இசுலாமியர்களுடன் போரில் இருக்கிறது. பாக்கிசுதானுடன் வடபகுதியில் பல போர்கள் ஏற்பட்டிருக்கின்றன, சீனாவுடனும் மோதியிருக்கிறது. பல குண்டுவெடிப்புகளை ஏற்படுகின்றன. இதெல்லாம் இந்துத்வாவின் அசபியாவை கூட்டுகிறது. அவர்கள் கலவரங்களை உருவாக்குவதே அவர்களின் அசபியாவை கூட்டுவதற்குத்தான்.

2. தமிழகம் இனவேறுபாடுகள் குறைந்த போரற்ற ஓரமான பகுதி. உள்நாட்டில் சாதி மோதல்கள் அதிகமாக நேர்வதால், சாதிகளின் அசபியாதான் கூடுகிறது. தமிழின அசபியா கூடவில்லை. இதனால் இந்துத்வம் எளிதாக தமிழினத்தை உள்வாங்கி இந்துத்வாவில் கரைக்கிறது.

3. இலங்கை சுதந்திரம் அடையும்வரை தமிழர்களுக்கு அசபியா கிடையாது. இலங்கையில் இனமோதல் ஆரம்பித்தபின்தான் அசபியா கூடியது. அதுவும் உக்கிரமான ஈழப்போர் அசபியாவை உயர்த்திவிட்டது, சாதிமத அடையாளங்கள் வலுவிழந்தது, தமிழின அடையாளம் வலுப் பெற்றது. இனப்படுகொலைக்குப்பின் அந்த அசபியாத் தமிழகத்திற்கும் தாவிவிட்டது. இன்றைய தமிழ்த்தேசிய எழுச்சிக்கான காரணம் என்பது, ஈழப்போர் உருவாக்கிய

அசபியாதான். ஈழப்போர் இல்லை என்றால், தமிழினம் தன்னையே உணர்ந்திருக்காது.

அசபியா என்பது, கூட்டு செயற்திறன் மட்டுமல்ல, அதுதான் இன அடையாளத்தையே உருவாக்குகிறது, நாட்டை உருவாக்குகிறது, பேரரசுகளைப் படைக்கிறது. அதிக அசபியா கொண்ட குழு, அசபியா குறைந்த மற்றக் குழுக்களை உள்ளிழுத்துக் கரைத்து, பெரும் வடிவமெடுக்கும். ஈழப்போர் நமது அழிவு என்று பலர் பார்க்கிறார்கள். அது தவறானது. அதுதான் தமிழினத்தின் அசபியா. இந்துத்வாவை / சிங்களத்தை எதிர்கொள்வதற்கான அசபியா இதுதான். 'அசபியா' என்பது மனபலம் என்பதால், இது தயனிசியன். அடிப்படையில் தமிழினத்தின் அசபியாவின் ஆணிவேர் என்பது, பிரபாகரனே!. அவர்தான் தயனிசிய ஊற்று. பிரபாகரன் வழியாக வரும் அசபியாவின் வலு என்பது இந்துத்வாவைவிட, சிங்களத்தைவிட பலமடங்கு அதிபலம் வாய்ந்தது, அது ஏற்கனவே நிரூபிக்கப்பட்ட ஒன்று,

இதுவரை பார்த்த உதாரணங்களில் இருந்து ஒன்றை உணரலாம். தோல்விகள், அவலங்கள், தியாகங்கள், போர் அழிவுகள் எல்லாம் ஆழமான உணர்வுகளை மக்களிடம் எழுப்பி, அவர்களை உந்தி இயக்குகின்றன. அப்பொழுது உருவாகும் தியாகி தயனிசியனின் குறியீடாக மாறுகிறார். இவைதான் தயனிசிய உணர்வுகளின் பிறப்பிடம். இவ்வுணர்வுகள் ஒரு சமூகத்திற்கு தான் யார்? என்ற அடையாளம் அளித்து, அவர்களை ஒற்றுமைப்படுத்தி, கூட்டுச் செயற்திறனை அதிகரித்து, அரசியலிலிருந்து அறிவாற்றல் வரை சமூகத்திற்குத் தேவையான அனைத்திற்கும் உந்து சக்தியாக இருந்து, அவற்றைத் தூக்கிப்பிடிக்கிறது. தயனிசியன் இல்லாவிட்டால் ஒரு சமூகத்தால் தன்னைத் தக்கவைக்க முடியாது.

சாக்கரட்டீசு செய்த தவறு என்பது, தயனிசிய உணர்வுகளை அளித்த அவல நாடகங்கள் என்ற கலையை அழித்தது. அவல நாடகங்கள் அவலத்தின் துன்பங்களை உணர வைத்து, மக்களை நெறிப்படுத்தும் வல்லமை வாய்ந்தது. உதாரணமாக, காந்தியை அரிச்சந்திரன் என்ற அவல / சோக நாடகம் மிகவும் பாதித்தது, அது அவருக்கு உந்து சக்தியாக இருந்துள்ளது. நமது வரலாற்றிலும் சிலப்பதிகாரம் போன்ற சோக, அவல நாடகங்கள் மக்களை நல்வழிப் படுத்தியிருக்கின்றன.

“அவலங்கள் நெஞ்சைப் பிழிந்து, அழுக்கைக் களைந்து, மனிதனின் உள்ளத்தைத் தூய்மைப்படுத்தும் தன்மை வாய்ந்தது” என்கிறார் அரிசுடாட்டில். இதை உண்மையான அவலத்தை அனுபவித்த நமக்கு உணர்வது கடினமில்லை. போர் என்பதும், அவலம் சார்ந்தது என்பதால், தயனிசிய உணர்வுகள் அவலத்தின் ஊடாக மட்டுமே வருகிறதா? என்ற கேள்வி எழுகிறது. நீட்சே கூறுவதைப் பார்த்தால் 'ஆம்!' என்பதுதான் விடையாகத் தோன்றுகிறது.

(தொடரும்)




வன்னித்தம்பி







# வெளிவாசல் இதுதான்

## உங்களுக்கான வழிகள் திறக்கப்பட்டு விட்டன.

**வ**ழமைக்கு மாறாக, அகரம் தன் நுழைவாசல் பதிவை 'வெளிவாசல் இதுதான்' எனப் பதிவு செய்யும் நேரம் வந்து விட்டது. தமிழ் அரசுக் கட்சி, தனது 67 வருட வீட்டுச் சின்னத்தை உடைத்து விட்டது. அது உருவான காலத்தில் சம்பந்தன், சுமந்திரன், மாவை, சேனாதி ராசா பிறந்தே இருப்பார்களா? என்கிற கேள்வியும் எழுகிறது. திருமலையில் இராஜவரோதயன் என்கிற தொடக்க கால உறுப்பினரின் தவத்தால், எமக்குக் கிடைத்த வரம்தான் இரா.சம்பந்தன்.

சிங்கள மக்களின் அறகலய போராட்டத்தைத் தமிழ் மக்கள் தமது அரசியல் தலைவர்களை 'வெளியே போங்கள்' என விரட்ட வேண்டிய காலம் என்றோ கடந்து வந்து விட்டது. உண்மையில் 1977 தேர்தலில் வெற்றி பெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பச்சோந்திகள், ஜே.ஆரின் அரசில் அமிர்த லிங்கம் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை ஏற்ற அன்றே, தமிழ் மக்கள் அறகலய போன்ற மக்கள் புரட்சியைத் 'நாட்டை விட்டே ஓடுங்கள்' என்று தமிழ்மக்கள் நடத்தி, அவர்களை நாட்டை விட்டே துரத்தி இருக்க வேண்டும். ஆனால், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தைத் தொடக்கி விட்டதால், இன்று வரை அவர்களின் துரோக அரசியல், ஜனநாயகத்தின் பெயரால் தொடருகிறது. தமிழ் மக்களின அடிமை வாழ்வும், தடையின்றி தினமும் அதிகரித்து வருகிறது.

சிங்கள இராணுவ அடக்கு முறைகளும், புத்த மத விகாரைகளும், பிக்குகள், சிங்கள மக்கள் தமிழர் நிலப்பரப்பில் பெருகி, தமிழ் இன அழிப்பும் தொடருகிறது. ஆனால், இவை பற்றிய எதிர்ப்பு எதையும் செய்யாமல், தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழ் மக்களையும் பயங்கரவாதிகளாகப் பிரச்சாரம் செய்யவும் தவறுவதில்லை. இத்தகையப் பிரச்சாரம் வலுப்பெற, ஆயதக் குழுக்களை இதே அரசியல் பதிவுகள் உருவாக்கி, வளர்த்து கட்சியின் பலத்தைப் பெருக்கினர்.

தமது வாழ் நாள் சாதனையாக தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தைச் சிதறடித்து, தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றை கடலில் கரைத்த உப்பாகக் கரைத்து விட்டது சம்பந்தன், சுமந்திரன், மாவை சேனாதிராசா அணி. அந்தக் கட்சி உருவாகி, வளர்ந்த வரலாற்றை அறியாதவர்கள் இந்த அணி. 1956 தொடக்கம், தெருத் தெருவாய் கொடிப் பிடித்துக் கோசம் இட்ட என் பள்ளிக்கால நினைவுகள் இன்னமும் அழியவில்லை.

என்னோடு சேர்ந்து கூச்சலிட்டப் பள்ளித் தோழர்கள், என்றோ தமது வழியில் சென்று வாழத் தொடங்கி விட்டார்கள். நானும் அரச பணி பெற்று, 1957 தொடக்கம் தமிழ் அரசாங்க எழுது வினைஞர் பதவி பெற்ற பின்னரும், தமிழ் அரசுக் கட்சியின் பிடியில் இருந்து விடுவிக்க என்னால் முடியவில்லை. அமிர்த லிங்கம் பிடியில் சிக்கிய கட்சியின் பிடியைக் கோப்பாய்க் கோமான் திரு.குமாரசுவாமி

வன்னியசிங்கம் அவர்களின் அகால மரணம் அடைந்த நாள் 1960 தொடக்கம், கட்சியை அமிர்தலிங்கம் தம்பதிகளின் சொந்தக் கட்சியாக மாற்றம் செய்து கொண்டனர்.

தந்தை செல்வாவின் செவிப் புலன், பேச்சுத் திறன் இழந்த நிலையால் 1970 தொடக்கம், அவரது மரண நாள் வரை, செல்லா பேசியதும் இல்லை, எதையும் கேட்டு விளங்கும் நிலையிலும் அவர் உடல் நிலை இருந்ததும் இல்லை. ஆனால், எல்லோரும் பார்க்கும் படியாக அமிர்த லிங்கத்தின் காதுகள், செல்வாவின் வாயோடும், காதுகளோடும் சில விநாடிகள் ஒட்டிக் கொண்டு இருந்த பின்னர், அவர் அதைச் சொன்னார், இதைக் கேட்டார் என்கிற பொம்மலாட்டம் நடத்தி, அமிர்தலிங்கம்தான் நினைத்ததைக் கட்சியின் முடிவாக நடத்தி வந்தார். அதன் பின்னர் அவரைக் கேள்வி கேட்கும் அளவுக்கு யாரும் அக்கட்சியில் இருக்க வில்லை.

அதனால் நடமாடும் பிணமாக வாழ்ந்த செல்வநாயகம், யாழ் மருத்துவமனையில் நினைவு இழந்து, மரணிக்கும் வரை அவரது அரச பதவியையும், பணக் கொடைகளையும் யார், எப்படி அனுபவித்தனர்? என்பதற்கான உண்மையான பதிலை யாரும் அறிந்திலர். சத்தியாக் கிரக போராட்டங்களும், மக்களின் நிதிப் பங்களிப்புகளும் அடை மழை போல் பொழிந்து தள்ளின. அவை போன இடத்தை அமிர்தலிங்கமும், நாகநாதனும்தான் அறிவர் என்கிற செய்திகள் மட்டும் வெளியில் தெரிந்தன. கட்சி நிதி பற்றிய கேள்வியை முதலில் எழுப்பிய, முன்னாள் கிளிநொச்சி பா.உ.சிவசுந்தரம் என்கிற நீர் பாசனப் பொறியாளர். அவரைத் தொடர்ந்து கட்சிக் கட்டுப் பாட்டை மீறியதற்காக பலர் வெளியேற்றப் பட்டனர்.



அவர்களில் மிக முக்கியமானவர் ஊர் காவல்துறையை பா.உ. அமரர் திரு.வ.நவரத்தினம் ஆவார். அவர் செய்த மிகப் பெரிய இன விரோத கட்சி விரோதச் செயல் டட்லியின் தேசிய அரசின் அடையாள அட்டை, மசோதாவை கட்சியின் நிலைப் பாட்டை மீறி எதிர்த்து வாக்களித்தமைதான். அந்தக் குற்றத்தைக் கட்சியின் செயற்குழுவோ, பொதுக் குழுவோ கூடிவிசாரித்து எடுத்த முடிவல்ல.


அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11


மாறாக, எதிர்த்து வாக்களித்த நவரத்தினம் அவர்கள் பாராளுமன்ற உணவகத்தில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த பொழுது, அங்கே வந்த அமிர்தலிங்கம் "நீங்கள் கட்சியில் இருந்து நீக்கப்பட்டு விட்டீர்கள்" என்கிற வாய் மூலக் கட்டளைதான். இதனைப் பின்னாளில் கனடாவில் வாழ்ந்த பொழுது பகிரங்கமாக திரு.நவரத்தினம் தமது நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

அவரால் தொடங்கப் பட்ட தமிழர் சுயாட்சிக் கழகத்தை, இப்பொழுது திருமதி அனந்தி சசிதரன் பொறுப்பெடுத்து செயற்படுகிறார்.

தமிழ் காங்கிரசால் தமிழ்த் தேசிய அரசியலுக்குக் கொண்டு வரப்பட்ட செல்வநாயகமும், வன்னிய சிங்கமும் திரு. பொன்னம்பலத்துடன் இணைந்து, தமிழரின் அரசியலைத் தொடர்ந்திருந்தால், எமது இனத்தின் வரலாறு வேறு விதமாகி இருக்கும். மாறாகத் தங்களுக்கிடையே யார் சரி? யார் பிழை? என்று போராடி, அனைவருமே தமிழின் துரோகிகளாக அரசியல் செய்தனர். அவர்களைக் கொழும்பு விவேகானந்த வித்தியாசாலை தலைமை ஆசிரியர் எவ்வளவோ மன்றாடி ஒற்றுமைப்படுத்த முயன்றும், அது தோல்வியில் முடிந்தது. இன்று தொடக்கம், ஒற்றுமை பற்றி உபதேசம் செய்யாத தமிழ் தலைவர் யாரும் இன்றுவரை பிறக்கவில்லை.

அப்படித்தான் 1972களில் ஒரு கூட்டம் கிளம்பியது. அந்தக் கூட்டத்தில் அடியேனும், தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்க செயற்குழுவின் உறுப்பினரில் ஒருவனாக இருந்தேன். எங்கள் தமிழ் அரசியல்வாதிகளின் நேர்மை, ஒழுக்கம் பற்றிய தெளிவான அறிவு எனக்கிருந்தது. அந்த வகையில் நம்பிக்கை சிறிதும் இல்லாத நிலையில், எங்கள் செயற்குழுவில் ஒரு செயற்திட்டம்

விவாதிக்கப்பட்டதற்கு ஸ்ரீமாவோ அரசு அறிவித்த **1972**ஆம் ஆண்டு இலங்கைக்கான புதிய அரசமைப்பு பற்றிய அறிவித்தல் காரணமானது.

தனிச் சிங்கள அரசகரும் மொழிச் சட்டத்தை எதிர்த்துக் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் கோடீசுவரன் என்கிற தனி நபர் வழக்காக, தமிழ் அரசாங்க எழுது வினைஞர் சங்கம் வழக்கை நடத்தி வந்தது. தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவாளர் என்கிற பொது அடையாளம் எமக்கு இருந்த காரணத்தால், திரு.முருகேசு, திருச் செல்வம் இந்த வழக்கை நடத்தும் பொறுப்பை ஏற்றிருந்தார்.

**1965**இல் டட்லி சேனாநாயக்க தலைமையிலான தேசிய அரசை அமைக்க, தமிழ் அரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் ஆதரவளித்தன. தன்னைக் கற்புக் கரசியாகக் காட்ட, தமிழ் அரசுக் கட்சி தனது சார்பாக திரு.மு.திருச் செல்வத்தைத் தமிழரின் மாகாண அரசமைக்க வசதியாக, உள்நாட்டலுவல்கள், வீடமைப்பு அமைச்சராகப் பதவி ஏற்பதாக அறிவித்து, தனது இரட்டை நாக்கு அரசியலைப் பகிரங்கமாகத் தொடங்க டட்லியின் தேசிய அரசும், திருச்செல்வத்தின் அமைச்சர் பதவியும் பயன் பட்டன.

பாஞ்சாலியின் பத்தினித் தன்மையைக் காண்பிக்க, தமிழ் அரசாங்க எழுது வினைஞர் செயலாளர் பாலசுப்பிர மணியம், அமைச்சர் திருச் செல்வத்தின் பிரத்தியேகச் செயலாளராகச் செயற்பட வசதியாக எமது சங்கம் இணங்கி, அவரை சங்கப் பணியிலிருந்து விடுப்பு வழங்கி உதவியது. அந்த நியமனத்தின் மூலம் சங்கம் தன் பங்கு என்ற நிலைக்கு தள்ளப் பட்டது. அதன் செயலாளராக இருந்த பால சுப்பிரமணியத்தால், தமிழரசுக் கட்சியையும், திருச் செல்வத்தையும் எதுவும் செய்ய முடியவில்லை என்ற விளக்கத்துடன், சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் அழுவே, எமது தமிழ் அரசுக் கட்சியின் விபச்சார அரசியல் அம்பலமானது.

தமிழ் மாகாண அரசு பழமாகும் எனத் தமிழ் மக்களும், சங்கமும் பார்த்துப் பார்த்து, விழிகள் பூத்து, பழம் காயிலே வெடித்துப் பஞ்சாக காற்றிலே பறப்பதைக் காணும் வரை, தமிழரசுக் கட்சியின் பத்தினி வேடம் நீடித்தது. ஏமாந்த கிளிகளின் மனநிலையில் சங்கமும், தமிழ் மக்களும் மூழ்கித் தவித்த நிலையில், ஸ்ரீமாவோ கட்சியின் தேர்தல் வெற்றியும், **1972** இல்புதிய அரசமைப்புக்கான அறிவித்தலும் கிடைத்தது.

தேசிய அரசின் அமைச்சாராகி விட்ட திருச்செல்வம், எங்கள் சங்கம் அரசுக்கு எதிராக நடத்திய வழக்கிலிருந்து முற்றாகத் தன்னை விடுவித்துக் கொண்டார். ஆனால், சங்கத்தால் உழவைப் பாதியில் அறுத்துப் போக வில்லை, அப்படிப் போகவும் முடியாது.

வழக்கை விசாரித்த கொழும்பு மாட்ட நீதிபதி, “தனிச் சிங்கள அரச மொழிச் சட்டம் நீதிக்குப் பிழையானது” எனத் தீர்ப்பளித்துச் சங்கத்துக்கும், தமிழ் மக்களுக்கும் ஆதரவான முடிவை அறிவித்திருந்தார். அந்தத் தீர்பை எதிர்த்து, மேல் முறையீட்டைச் செய்த அரசின் வழக்கை விசாரித்த நீதிபதி, “நாடு சுதந்திரம் பெற்ற காலத்துக்கு முன்னர் இருந்த, பிரித்தானிய அரசின் சட்டத்தை ஆதாரமாக வைத்து, அரசுக்கு எதிராக அதன் ஊழியர்கள் போராட முடியாது” என்கிற விதியின் கீழ் மாவட்ட நீதிமன்றத் தீர்ப்பைத் தள்ளுபடி செய்தது.

வழக்கை சங்கம் பிரித்தானிய பிரபுக்கள், நீதி மன்றத்துக்கு மேன்முறையீடு செய்தது. ஆட்சியல் பங்கேற்ற பின்னர், தமிழ் அரசுக் கட்சி இந்த வழக்கைத் தொடர வேண்டாம் என்றும், வழக்கை நடத்த ஆதரவு வழங்குவதையும் நிறுத்தியது. ஆனால், இது கட்சியின் பிரச்சினை அல்ல, தமிழ் மக்களின் பிரச்சினை என்கிற நிலைப் பாட்டில் வழக்கை இங்கிலாந்திலும் தொடர்ந்தது.

அதனால் சங்கமும், அதன் உறுப்பினர்களும் மிகப் பெரும் செலவை ஈடு செய்ய, சம்பள உயர்வு மறுக்கப்பட்ட நிலையிலும், தமது சம்பளத்தில் பாதிக்கும் மேலாகக் கொடுத்து, வழக்கைத் தொடர்ந்தனர். இப்படி நடத்திய வழக்கின் தீர்பை இங்கிலாந்தின் பிரபுக்கள் சபை, இந்த வழக்கை இலங்கை மேல் நீதி மன்றம் மீண்டும் விசரணை செய்து, தீர்ப்பு வழங்க ஆணையிட்டது.

இதனால் கொதிப்படைந்த ஸ்ரீமாவோ, தொடர்ந்து வந்த பொதுத் தேர்தலில் இந்த அரசமைப்பை மாற்றுவேன் எனச் சிங்கள வாக்காளர் மத்தியில் வாக்குறுதி வழங்கி, **3**இல் **2** பங்கு ஆதரவுடன், தேர்தலில் ஆசனங்களைப் பெற்றிருந்தார். அவருடைய இப்படியான

தேர்தல் பிரச்சாரம் பற்றி, தமிழர் மத்தியிலோ, தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களிடமோ எதுவித பிரச்சாரமும் இடம்பெறாத காரணத்தால், அரசமைப்பு மாற்றத்தின் அவசியம் பற்றி எவரும் பேசியதும் இல்லை. அந்த அளவுக்கு அரசியல் ஞான சூனியங்களாக எங்கள் அசியல்வாதிகள் அன்றும் இருந்தனர், இன்றும் உள்ளனர். இவை எல்லாம் சம்பந்தன், சுமந்திரன், மாவைக்குத் தெரியாது. ஆனால், நீதியரசர் விக்னேஸ்வரன் அக்கால கட்டங்களிலும், பின்னரும் கொழுப்பு சட்டக் கல்லூரி மாணவனாகவும், நீதிபதியாகவும் செயற்பட்டவர் என்பதால், தெரியாமல் இருக்க நியாயம் இல்லை.

*1972* ஜனவரி மாதப் பகுதியில், எமது சங்கச் செயற்குழு எல்லாத் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து, தமிழ் மக்கள் சார்பாக ஏகோபித்த அரசியல் நிலைப் பாட்டில், உத்தேச அரசமைப்புச் சட்டத்தை எதிர் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தது. அதற்காக திருவாளர்கள் ஜீ.ஜீ.. சி.சுந்தரலிங்கம் தொண்டமான், நாட்டில் இல்லாத காரணத்தால் அவர் சார்பாக திரு.செல்லச்சாமி அவர்களைச் சந்தித்து, தமிழ்த் தலைவர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழே புதிய அரசமைச் சட்டத்தை எதிர் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தது.

எல்லாத் தலைவர்களின் சம்மதம் பெற்ற பின்னர், எமது குழு தமிழரசுக் கட்சித் தலைமையுடன் தந்தை செல்வா இல்லத்தில் பேச நேரம் தரப் பட்டது. அந்த நாளும் வந்தது, நாங்களும் சென்றோம். அங்கே தர்மலிங்கம் உட்பட பல தலைவர்கள் இருந்தனர். அவர்களிடம் நாம் மற்றத் தலைவர்களிடம் கேட்டதைப் போன்றே என்ன திட்டம்? என்ன செய்ய வேண்டும்? என்பது பற்றி அல்ல, எல்லாத் தலைவர்களும் ஒன்றாகச் சந்தித்து, ஒரு பொது வேலைத் திட்டத்தின் கீழ் தமிழ் மக்களுக்கான கோரிக்கையை உத்தேச புதிய அரசமைப்புச் சட்டத்தில் இடம் பெற வைக்க வேண்டும் என்பதை மட்டும் கேட்டிருந்தோம்.

அதற்கு அவர்கள் நாங்கள் பெரிய கட்சி. எப்படிச் சமமாக மற்றவர்களை ஏற்க முடியும்? என்பன போன்ற எரிச்சலூட்டும் கேள்விகளைக் கேட்டு, எங்களைக் கடித்துக் குதறத் தொடங்கினர். ஏமாற்றத்துடன் அவர்களின் ஒற்றுமை என்ன? எனத் தெரிந்து,



வெறுங் கைகளுடன் திரும்பி விட்டோம். இவற்றைத் தமிழ் வாரப் பத்திரிகையில் முதல் பக்க செய்தியாக வெளிவரச் செய்தவர், உயிர் தப்பி கனடாவில் புகலிடம் பெற்ற பத்திரிகை ஆசிரியர் திரு. திருச் செல்வம். அவரைத் தேடிச் சென்ற கொலைகாரர்கள், அவரது மகனைச் சுட்டுக் கொன்ற துயரத்துடன், தன் வாழ் நாளைக் கழித்த துயரம் மறக்க முடியாத நினைவுகள்.

ஆனால் நாங்கள் போட்ட விதையை, முளையிலே கிள்ளி எறிந்த தமிழ் அரசுக் கட்சி, அடுத்த ஒற்றுமை நாடகத்தை 1972 வட்டுக் கோட்டையில் அரங்கேற்றி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்கிற பெயரில் தனித் தமிழ் நாட்டுப் பிரகடனத்தையும் செய்து, 1977 தேர்தல் பிரச்சாரத்தைச் செய்து, மாபெரும் வெற்றியை அறுவடை செய்தனர். வட்டுக் கோட்டையில் யார்? எப்படி? எதற்காக ஒன்றிணைந்தார்கள்? என்பது, தமிழ் அரசுக் கட்சியும், அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கமும் மட்டுமே அறிந்த இரகசியம். ஆனால், யார் பெரிசு? யார் சிறிசு? என்கிற உயிர் போகிற கேள்வி மட்டும் எழுப்பப்பட வில்லை.

கொழும்பு திரும்பியதும் திரு. சௌமிய மூர்த்தி தொண்டைமான் விலகி, தனது அரசியலைத் தொடர்ந்தார். ஆனால், அது பற்றியோ, மற்றவர்களின் கற்பைப் பற்றியோ யாரும் கவலைப் படவில்லை. தமிழ் அரசுக் கட்சிக்குத் தேவையான தமிழ் இளைஞர் பெரும் கூட்டம் தேர்தல் வெற்றிக்கு உத்தரவாதம் உறுதியாகி விட்டது.

மாற்றுக் கட்சித் தலைவர்களான அல்பிரட் துரையப்பாவையும், அருளம்பலம் ஆ.தியாகராசாவையும் சுட்டுக் கொல்ல தேவையான இளைஞர்கள் தயாராக இணைந்தனர். அப்படி இணைந்து, கட்சித் திருப்பணி செய்த தமிழ்ப் பெடியன்களைத்தான் தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் எனச் சம்பந்தனும், சுமந்திரனும், டக்லஸ்' தேவானந்தாவும் சொல்லித் தங்கள் தமிழரின் அரசியலைச் செய்கிறார்கள்.

கொல்லப் பட்டவர்களின் இடத்தை தமிழ் அரசுக் கட்சி, தன் ஆட்களை வைத்து தன்னை வளர்த்தது. அப்படி வந்தவர்தான் அதன் தலைவர் மாவை சேனாதிராசா. இப்படிப் பட்ட சந்தர்ப்பவாத தலைவர்களுக்கு எதற்கு ஒரு கட்சி?. ஆளில்லாத கடையில் தேனீர் வியாபாரமா? இது வரை உங்களின் மக்கள் சேவை போதும். வீடும் அழிந்து, நாடும் அழிந்த பின்னர், வெளி வாசல் வழியாக எங்காவது குட்டிச் சுவரில் ஒதுங்கும் நேரம் வந்து விட்டது.




BCN TRAVELS (REISEBÜRO)
Consulting Network.ug
(Travels-Business-Worldwide)
RYANAIR
easyJet
KLM
Emirates
AIR CANADA
SINGAPORE AIRLINES
QANTAS
International Monye Transfers
Ria
Worldwide Money Transfer
small world
Last Minute Tickets avaliable on Sunday and Holidays
Tel : 01638714369
Flugtickete und hotel kann man auch hier buchen
Rheinische str-72
44137 Dortmund
023110876360
023110876361
Fax : 023110876362
bcntravels@hotmail.de
People's Insurance
Covid19 Insurance
Health Declaration Form
Ministry of Health - Sri Lanka
SRILANKA, INDIA CANADA, AUSTRALIEN, SINGAPUR, ERUOPEA, UK, USA
AIR FRANCE
Lufthansa
الطيران العماني
OMAN AIR
QATAR AIRWAYS القطرية
एअर इंडिया
AIR INDIA
BRITISH AIRWAYS
www.bcn-travels-dortmund.com





ஆர்.பாரதி

# மீண்டும் சொந்த வீடுகளில்

“பலாலியில் காணிகள் விடுவிக்கப் பட்டுள்ள போதிலும், எங்களுக்கு எந்த வாழ்வாதாரமும் இல்லை, சந்தோசமும் இல்லை. தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்தே வருகின்றோம்” என்பதுதான் பலாலி மக்களின் கவலையாக இருக்கின்றது.

பலாலிப் பகுதியில் கடந்த வார இறுதியில் சில காணிகள் விடுவிக்கப்பட்ட பின்னணியில், அது குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட போதே அப்பகுதியில் மீள்குடியேறுவதற்காகச் சென்றவர்கள் பலர் இவ்வாறு தெரிவித்திருந்தார்கள்.

அவர் தெரிவித்த இந்தக் கருத்துகள், ஒட்டுமொத்தமாக அந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களின் கருத்தாகவே இருந்தது. அவர்கள் தெரிவித்தது இதுதான்-

“1990 இல் போர் காரணமாக எனது தாய், தந்தையர் இடம்பெயர்ந்தனர். ஆனால், நாங்கள் அங்கே பிறக்கவில்லை. எங்களுடைய சொந்த நிலத்தை இப்போதுதான் நாங்கள் முதன்முறையாகப் பார்க்கிறோம். இங்கிருந்து இடம்பெயர்ந்த பின்னர் எவ்வளவு துயரங்களை அனுபவித்தோம்?. இப்போதும் அனுபவிக்கிறோம். எந்தவொரு அடிப்படை வசதிகளும் இல்லாத முகாம்களில் தங்கவைக்கப்பட்டோம்.

காணிகளை விடுவித்தமை எமக்கு மகிழ்ச்சிதான். ஆனால், இன்னும் பல இடங்களில் விடுவிக்கப்பட வேண்டியிருக்கின்றது. தற்போது காணிகளை விடுவித்தும் எமக்கு எந்தவிதமான வாழ்வாதாரமும் இல்லை. வீடு சீரமைப்பதற்கும், காணிகளைத் துப்புரவாக்குவதற்கும் அரசாங்கம் வழங்கும் பணம் போதுமானதாக இல்லை” என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடந்த சுமார் மூன்று தசாப்த காலமாக இருந்த வலிகாமம் வடக்கிலுள்ள 180 ஏக்கர் காணி, கடந்த வாரம் விடுவிக்கப்பட்டிருக்கின்றது. போரின் போது மக்களை இரவோடிரவாக துரத்திய படையினர், இப்போது பெரும் ஆரவாரங்களுடன் இந்தக் காணிகளை விடுவித்து, அதனை அரசியலாக்கி இருக்கின்றார்கள். காணிவிடுவிப்பை ஒரு நிகழ்வாக ஏற்பாடு செய்து, அதனை அரசியலாக்க வேண்டிய தேவை இன்று அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருக்கின்றது.

படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகள், இதனைவிட சுமார் இருபது மடங்கு இருக்கின்ற போதிலும், ஒரு சிறிய நிலப்பகுதிதான் இப்போது விடுவிக்கப் பட்டிருக்கின்றது. உத்தியோகபூர்வ தகவல்களின்படி பலாலி பகுதியில் இன்றும் சுமார் இரண்டாயிரம் ஏக்கர் காணி இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. இவற்றில் பெரும்பாலானவை விடுவிக்கப் படுவதாக அடையாளம் காணப் பட்டிருக்கின்றன. ஆனால், அவற்றை

விடுவிப்பதற்குத் தற்போதைய நிலையில் படையினர் தயாராக இல்லை என்பது தெரிகின்றது.

சுமார் 30- 35 வருடங்களுக்குப் பின்னர் தமது காணிகள் மீளக் கிடைத்திருப்பதில் அந்தப் பகுதி மக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கின்றார்கள். ஒரு தலைமுறைக்கும் அதிகமான காலத்தை முகாம்களிலும், உறவினர் இல்லங்களிலும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு எந்தளவுக்கு நெருக்கடியைக் கொடுத்திருக்கும்? என்பது புரிந்து கொள்ளக் கூடியதுதான்.

ஆதனால், பெரும்பாலானவர்கள் மீளக்குடியமர்வதில் அவசரம் காட்டுவதையும் அவதானிக்க முடிகின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், காணிகளை விடுவிப்பதன் மூலமாக தனக்கு முன்னாலுள்ள நெருக்கடியைக் குறைக்க முயல்கின்றதே தவிர, அந்தப் பகுதி மீள்குடியேற்றம், மீள்கட்டுமானம் குறித்த திட்டங்கள் எதுவும் அதனிடம் இல்லை.

காணி விடுவிக்கப்படும் நிலையில் இரண்டு விடயங்கள் தொடர்பில் நாம் கவனம் செலுத்துவது முக்கியம். முதலாவது, விடுவிக்கப்படும் பகுதிகள் தொடர்பான புதிய கட்டுமானத் திட்டங்கள் எதுவும் அரசாங்கத்திடம் இல்லை.

மக்களைப் பொறுத்தவரையில், தமது காணிகளை அவர்கள் பொறுப்பேற்கின்றார்களே தவிர, தமது வீடுகளைத் திருத்தி அமைத்து அந்தப் பகுதிகளில் தமது வாழ்க்கையை மீளத் தொடங்குவதில் எந்தளவுக்கு ஆர்வத்தைக் காட்டுவார்கள்? என்பது கேள்விக் குறியாகவே இருக்கின்றது. காரணம், அடிப்படை வசதிகளோ, கட்டுமானங்களோ அங்கில்லை.

காணிகளைத் துப்புரவாக்கி, வீடுகளைத் திருப்பிக் கட்டி, தமது புதிய வாழ்க்கையை ஆரம்பப்பதற்குத் தேவையான பண வசதிகளும்கூட அந்தப் பகுதியைச் சேர்ந்த பெரும்பாலான மக்களிடம் இல்லை. பாடசாலைகள், மருத்துவ நிலையங்கள், வங்கிகள், போக்குவரத்து வசதிகள் என்பனவும் கேள்விக்குறியாகத்தான் இருக்கின்றன. அடிப்படையான கட்டமைப்புகள் இல்லாத நிலையில், போரினால் சிதைந்துபோன ஒரு பகுதியில் மீள்குடியேற்றம் என்பது, எந்தளவுக்கு வெற்றிபெறும்? என்பது கேள்விக்குறியாகவே இருக்கும்.

இதனைவிட வலிகாமம் வடக்கின் பொருளாதார ரீதியான முக்கியத்துவம் குறைத்து மதிப்பிடக் கூடியதொன்றல்ல. விவசாயத்துக்கு மிகவும் வளமான நிலத்தைக் கொண்டுள்ள பகுதி அது என்பது, அனைவருக்கும் தெரியும். மயிலிட்டியும், அதனையடுத்துள்ள பகுதிகளும் மீன்பிடிக்கு மிகவும் பிரசித்தமானது. இலங்கையிலேயே சிறந்த மீன்பிடித்துறைகளில் ஒன்றாகக் கருதப்படும் பகுதிதான் அது. இவை இரண்டும் இயற்கையாக அமைந்த வளங்கள்.

அதனைவிட பலாலி விமான நிலையம், காங்கேசன்துறை துறைமுகம் என்பனவும் இந்தப் பகுதியில்தான் அமைந்திருக்கின்றன. ஆக, இது வர்த்தக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தமிழர்களுக்கு முக்கியமான பகுதிகள். காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையும் இந்தப் பகுதியில்தான் அமைந்திருந்தது. பொருளாதார ரீதியாக இதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தும் கட்டுமானங்கள் அவை.




காங்கேசன்துறையிலிருந்து விரைவில் தமிழகத்துக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப் போவதாக வந்திருக்கும் செய்திகள், இதன் முக்கியத்துவத்தை மேலும் அதிகரிக்கின்றது. வடக்கிலிருந்து உள்ளூர் உற்பத்திப் பொருட்கள் சிலவற்றை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகள் இதன்மூலமாக ஏற்பட்டிருப்பதாக வர்த்தகத் துறையினர் எதிர்பார்க்கின்றார்கள். வர்த்தக ரீதியாக இந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை இது நிச்சயமாக அதிகரிக்கும்.

இந்த நிலையில், வலிகாமம் பகுதியில் விடுவிக்கப்பட்ட காணிகளில் எவ்வாறான பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்? என்பது தொடர்பாக ஆராய வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கின்றது. அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தமிழர் பகுதிகளைப் பொருளாதார ரீதியாக உயர்த்தக் கூடிய திட்டங்களில் தமது கவனத்தைச் செலுத்தும் என்பது எதிர்பார்க்கக் கூடியதல்ல. இதில் தமிழர்கள்தான் அக்கறை செலுத்த வேண்டும்.

அரசியல் தீர்வு வரட்டும் எனக் காத்துக்கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. எம்மைப் பலப்படுத்தும் வகையில், எமக்கான பொருளாதாரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு என்ன செய்ய முடியும்? என்பதையிட்டு புலம்பெயர்ந்த - தாயகத்தில் உள்ள முதலீட்டாளர்கள், இத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்கள் ஆராய்ந்து, அதற்கான செயற்பாடுகளை விரைந்து முன்னெடுக்க வேண்டும்.

வலிகாமம் வடக்கு பகுதியில் இடப்பெயர்வுக்கு முன்னர் இருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் வேறு இடங்களில் அல்லது வேறு நாடுகளில் குடியேறி விட்டனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் மீண்டும் வந்து அந்தப் பகுதிகளில் தமது வாழ்க்கையைத் தொடர்வார்கள் என்பது எதிர்பார்க்கக் கூடியதல்ல. தமது காணிகளை மீளப்பெற்று, அவற்றை விற்பனை செய்வதற்கு அவர்கள் அக்கறைப்படக்கூடும். அதனால், அந்தப் பகுதிகளின் மக்கள் தொகை குறைவானதாகவே இருக்கப் போகின்றது.

பொருளாதார நடவடிக்கைகளுக்குக் குறிப்பாக ஏற்றுமதி, இறக்குமதியுடன் தொடர்புபட்ட வர்த்தக நடவடிக்கைகளுக்கு இந்தப் பகுதிகளை அபிவிருத்தி செய்வது பொருத்தமானதாக இருக்கும். அவசர கட்டுமானங்கள், திட்டமிட்ட முறையில் நகரம் ஒன்றை கட்டியெழுப்புவதற்குத் தடையாக அமைந்து விடலாம். அரசாங்கம் இந்த விடயத்தில் அக்கறை காட்டப் போவதில்லை.

அதனால், தமிழ் மக்கள் குறிப்பாக புலம்பெயர்ந்த மக்கள், பொருளாதார நிபுணத்துவம் வாய்ந்தவர்களின் ஆலோசனைகளுடன் இந்தப் பகுதியை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும்? என்பது தொடர்பில் ஆராய்ந்து, அதற்கான திட்டம் ஒன்றை முன்னெடுப்பது பயனுள்ளதாக இருக்கும். தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கூட இது தொடர்பில் எந்தவிதமான அக்கறையும் இல்லாதிருப்பது கூட ஆச்சரியமானதல்ல. அது அவர்களுடைய வழமையான போக்குதான். ஆனால், தாயகத்தின் அபிவிருத்தியில் அக்கறையுள்ளவர்கள் இந்த விடயத்தில் உடனடியாக கவனத்தைச் செலுத்த வேண்டும்.






DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழ வகைகள் மற்றும்
உணவுப்பொருட்களை மொத்தமாக
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
StaR-Impex
JACK MACKEREL
BTM
ROSE SHERBET SYRUP
Rabeena
CHICKEN CURRY PASTE
INSTANT THOSAI MIX
MUTHU SAMBA RICE
Hot Hot Hot Hot
CURRY POWDER
PARBOILED RICE
Lebensmittel Grosshandel e.K.
Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net
Rabeena Since 1986 We've Mastered Taste
Aachi The Mother of Good Taste
பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்
BTM
Double Horse
Bringing Health to Life
TRS ASIA'S FINEST FOODS
MDH
Laziza INTERNATIONAL
DAAWAT THE FINEST BASMATI
Elephant House
Shan
AKASH BASMATI
Rubicon
Tilda Legendary Rice
Nestlé
PG tips
Niru
AROY-D
MTR
AASHIRVAAD
Pillsbury
PATAK'S Original
Laila

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

### தேர்தல் திருவிழா!

தேர்தலும் வந்து போகும்
வேட்பாளர்கள் பிரிந்தோடி
கதிரையைப் பிடித்துவிடவே
ஏமாறும் மக்கள் கூட்டம்!.



### கிருமி!

வாய் மூடி மூக்கு மூடி
மௌனமாய்ச் செல்கையில்
தொற்றிக் கொண்டது
மலேரியா, டெங்குக் கிருமி!.



### அமோகம்!

ஐஸ் போதைப் பொருட்களும்
ஆட்கடத்தல் சம்பவங்களும்
பாலியல் துஸ்பிரயோகங்களும்
நாட்டில் அமோக வரவுகள்!.



### அறுவடை!

அறுவடைக்கு ஆயத்தம்
உண்போர் முகத்தில் ஆனந்தம்
கொட்டிய பெருமழையால்
கண்ணீரால் தோய்கிறான் விவசாயி!.

### காதல்

புயலைவிட மிக வேகமாக தாக்கியது
உன் விழியின் ஓரப்பார்வை
கொஞ்சம் தாழ்த்திக்கொள்
நான் நானாக நிலைத்து நிற்க

நான் புரிந்து கொள்ளும் வரை
எதையுமே ரசிக்கவில்லை
உன்னை புரிந்து கொண்டபின்
உன்னை தவிர
வேறு எதையும் ரசிக்கவில்லை

வார்த்தைகள் ஏதுமின்றியே
மௌனமாய்த் தொலைவில் நின்றே
என்னை உனக்குள் தொலைக்கச் செய்தாய்
இந்தநொடி இப்படியே தொடர்ந்திட வேண்டும் .



**நந்தினி, இலண்டன்**

“உள்ளம் திறக்கும் உண்மைகள்...” என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

# அகர கவிக்களம்....

## போராடு
நேற்று என்பது முடிந்து போனது
நாளை என்பது நிரந்தரம் அற்றது;
இன்று இந்த நொடி மட்டுமே
உனக்கானது;
போராடு....
ஏன் செய்தாய் எனக் கேட்டவர்கள்
எப்படிச் செய்தாய்
எனக்கேட்கும் வரையில்;
கவலைகளை "களை"
துன்பங்களை "தொலை"
சுமைகளைச் சுமந்து,
வலிகளை தாங்கி,
ஏமாற்றங்களை ஏற்று,
தோல்வியை தோற்கடித்து
வா முன்னே!
திறமை இருந்தும் நிராகரிக்கப்பட்டு
முடக்கப்படும் மனதின் வலி...
வெயில் தரையில்
விழுந்து துடிக்கும்
புழுவின் வலியை போன்றது
போரோடு போராடு!



## உன் சிப்பாய் நான்
தாலிபன்களைப் போல் நீ
என் இதயத்தில் அத்து மீறி நுழைந்து
"சிம்மாசனம்" போட்டு
"இதய ராணியாக"
அமர்ந்து கொண்டாய் ..!!
நானும் உனது ஆயுதங்களுக்கும்
"முதல் மரியாதை" கொடுத்து
"உன் சிப்பாயாய்" இருந்து
உனக்கு சேவை
செய்ய முடிவு செய்து விட்டேன்...

- நா.மேனன்

## கடந்து செல்வாயே!
மனிதன் மனத்தில் தடுமாற்றம்
மரண பீதி பயமுறுத்தும்
தனிமை வாட்டும் வேளையிலே
தரணி எங்கும் பிணக்குவியல்
இனியும் வேண்டாம் கொல்லும்போர்
ஈனக் குரலால் கேட்கின்றேன்
கனிவாய்க் கேட்பாய் நல்லியற்கை
கடந்து செல்வாய் உலகினையே!!

## தங்க நிலாவே
துன்பத்தில் தோள்தந்த
சுந்தரன் நீயன்றோ
அன்பைச் சொரிந்தாய்
அகன்றுநீ -சென்றாய்
தனிமையிலே வாடுகிறேன்
தங்க நிலாவே
இனிமேல்நீ வேண்டாம்
எனக்கு

## நிம்மதி
சிந்தனை சிறக்க வேண்டும்
சீருடன் மலரும் வாழ்வு
வந்தனை செய்யும் வேள்வி
மனத்திலே தோன்றும் மாட்சி
அந்தமில் லாத வல்லோன்
அருள்தரும் ஈடில் காலம்
நிந்தனை யின்றி நீயும்
நிம்மதி பெறுவாய் நாளும்

## அகரமே
தேன்தமிழால் ஆண்டிடத்
தேடும் அகரமே!
மேன்மையுடன் வாழ்வாயே
மேதினியில்- நான்காணும்
வெண்ணிலாவே வந்தெனக்கு
வேகமாய்க் கூறிடுவாய்
எண்ணில்லா ஆற்றல் இங்கு!

- ரூபா அன்ரன், சுவிஸ்

சண் தவராஜா

# தண்ணீர் விட்டோ வளர்த்தோம்...





ஈழப் போரின் முடிவின் பின்னான காலப்பகுதியில் ஈழத் தமிழ் மக்களின் பெரு விருப்புக்கு உரிய கட்சியாக - மிகச் சரியாகச் சொல்வதானால் கட்சிகளின் கூட்டணியாக விளங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு காலாவதியாகிப் போயிருக்கிறது. ஒத்துக் கொண்டாலும், ஒத்துக்கொள்ள மறுத்தாலும் இந்த உடைவுக்கான காரணமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியே உள்ளது. அன்று தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் செயற்பட்ட இன்றைய தமிழரசுக் கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அத்திவாரக் கட்சி எனலாம். அந்தக் கட்சியை அடிப்படையாக வைத்துக் கொண்டே ஏனைய கட்சிகளோடு பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு கூட்டமைப்பு உருவாக்கப் பட்டது.

2001 செப்டெம்பரில், மட்டக்களப்பு ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினரான மாவை சேனாதிராஜா அவர்களுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின் போதோ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான கரு உருவாகியது. இலங்கை தமிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவராக அவர் பதவி வகிக்கும் நிலையிலேயே, கூட்டமைப்பில் இருந்து விலகி, தனியாகப் போட்டியிடும் முடிவு எட்டப்பட்டிருப்பது வரலாற்றில் எத்தகைய முரண்நகை?

இன்று போலவே அன்றும் தமிழரசுக் கட்சியும், அதன் தாய்க் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணியும் ஒரு மிதப்பு மனோநிலையிலேயே இருந்தன. தாங்கள் பாரம்பரியக் கட்சி என்பதுவும், தமிழ் மக்கள் மத்தியில் அதிக ஆதரவு பெற்ற ஜனநாயகக் கட்சி என்பதுவும், இரத்தக் கறை படியாத கரங்களைக் கொண்டவர்கள் என்பதுவும், அவர்களின் மிதப்பான மனநிலைக்குக் காரணங்களாக இருந்தன. ஆனால், ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தினாலும் வெறுத்து ஒதுக்கப்பட்ட ஒரேயொரு கட்சியாக 1980 முதல் 1990 வரை அந்தக் கட்சி விளங்கியது என்பதை, அவர்கள் வசதியாக மறந்து விட்டிருந்தனர். அந்தக் கட்சியின் தலைவராக விளங்கிய தளபதி அமிர்தலிங்கம் 1989ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில், யாழ் மாவட்டத்தில் போட்டியிட முடியாத சூழ்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியைத் தழுவியிருந்தார் என்பதையும் அந்தக் கட்சியினர் வெளியே சொல்வதில்லை.

யதார்த்தம் இவ்வாறு இருந்த போதிலும், கூட்டமைப்பில் கட்சிகளை இணைத்துக் கொள்வதில் ஆரம்பம் முதலே தமிழர் விடுதலைக் கூட்டணி இழுத்தடிப்பு மனோபாவத்தையே கையாண்டிருந்தது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கூட்டமைப்பில் இணைந்து கொள்வதற்கு முதலில் மறுப்புத் தெரிவித்திருந்தது. பின்னர், தமது வழக்கமான பாணியைப் பின்பற்றிய விடுதலைப் புலிகள் அந்தக் கட்சியைச் சம்மதிக்கச் செய்திருந்தனர். செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) என்பன எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல், அதேவேளை பல நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு, கூட்டமைப்பில் இணைந்து கொள்ளச் சம்மதம் தெரிவித்திருந்தன. ஆனால், அந்தக் கட்சிகளைக் கூட்டமைப்பில் உள்வாங்குவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணி தயாராக இருக்கவில்லை. "இரத்தம் தோய்ந்த கரங்களுடன் கைக் கோர்க்கத் தாம் தயாராக இல்லை" என்பது அவர்களின்

நிலைப்பாடு. பின்னர், விடுதலைப் புலிகள் தமது வழக்கமான பாணியில் அவர்களையும் சம்மதிக்க வைக்க வேண்டிய நிலை உருவானது.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டும் என கிழக்கு மாகாண ஊடகவியலாளர்கள் சிலரும், ஒருசில புத்தி ஜீவிகளும், விடுதலைப் புலிகளின் உள்ளூர்த் தலைவர்கள் சிலரும் இணைந்து முடிவுக்கு வர, ஒருசில காரணங்கள் இருந்தன.

முதன்மைக் காரணமாக இருந்தது, அதற்கு முந்திய வருடத்தில் நடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று முஸ்லிம்கள் வெற்றி பெற்றிருந்தமை. அதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் இரா. சம்பந்தன் தோல்வியைத் தழுவியமையும், அந்த மாவட்டத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டமையும். இந்த இரண்டு விடயங்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊடகர்கள் மத்தியிலும், விடுதலைப் புலிகள் மற்றும் பொது நோக்கர்கள் மத்தியிலும் மிகப் பெரிய பேசுப் பொருளாக விளங்கின.

அன்றைய காலகட்டத்தில் மக்களின் குரலாக விளங்கிய கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம், தமிழர் மறுமலர்ச்சிக் கழகம் போன்றவை இத்தகைய கருத்துகளுக்கு ஒரு செயல் வடிவம் கொடுப்பதில் தொடர்ந்து பல முன்னெடுப்புகளைச் செய்தன. அத்தகைய நடவடிக்கைகளின் போது, சகோதரப் படுகொலைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டிய அவசியம் தொடர்பிலும் பலரால் வலியுறுத்தப்பட்டது.

இத்தகைய கருத்துகளின் ஒட்டுமொத்த திரள் வடிவமாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உதயமானது. அந்தக் காலகட்டம் விடுதலைப் புலிகளுக்கும் கூட்டமைப்பின் தேவையைச் சாதகமாக ஆக்கியது. செப்டெம்பர் 11 தாக்குதல்களைத் தொடர்ந்து அமெரிக்க அறிவித்த ‘பயங்கரவாதத்துக்கு எதிரான போர்’ உலகின் ஆயுதப் போராட்ட இயக்கங்களின் எதிர்காலம் தொடர்பான கேள்விகளை உருவாக்கி இருந்தது. அந்த நிலையில் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட ஒரு குரலாக, தமக்குச் சார்பானவர்களை முன்னிறுத்த வேண்டிய அவசியம் விடுதலைப் புலிகளுக்கும் உருவாகியது. இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உச்ச பட்சம் பயன்படுத்திக் கொண்டார்கள்.

அதேவேளை, கூட்டமைப்பின் உருவாக்கத்திற்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த யோசப் பரராஜசிங்கம், சிவநேசன், ரவிராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சந்திரநேரு, சிவமகாராஜா ஆகியோருடன் ஊடகவியலாளர்களான ஜி.நடேசன், டி.சிவராம் போன்ற பலரும் தமது உயிர்களை விலையாகத் தரவேண்டி இருந்தது. இந்தப் பட்டியல் நீளமானது. கூட்டமைப்பின் சிதைவுக்கு முன்னின்று செயற்பட்டவர்கள் இது பற்றிச் சிந்தித்திருப்பார்களா?



காலத்தின் தேவையாக உருவாகிய கூட்டமைப்பின் அவசியம், தற்போது முன்னெப்போதையும் விடவும் அதிகமாக உள்ள நிலையில், அது உடைந்து போயிருப்பது வேதனை தரும் விடயம். குறிப்பாக, கூட்டமைப்பு உருவாகுவதற்கு முதன்மைக் காரணங்களாக விளங்கிய அபாயங்கள்(?) இன்னமும் அதே நிலையில் உள்ள நிலையில் இது நிகழ்ந்திருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கடந்த முறை நடைபெற்ற தேர்தலில் இரண்டு ஆசனங்களை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடிந்தது. தமிழ்த் தேசியத்துக்கு எதிரானவர்கள் என்ற வரையறைக்குள் உள்ள இரண்டு தமிழர்கள், இந்தத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். கூட்டமைப்பைப் பொறுத்தவரை இதுவும் விரும்பத்தகாத ஒரு நிகழ்வே!. கூட்டமைப்பு சார்பில் தெரிவு செய்யப்பட்ட இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், தற்போது எதிரெதிர் அணியில் உள்ளனர்.

இந்நிலையில், எதிர்வரும் காலங்களில் நடைபெறும் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள் நான்கு, ஐந்தாகப் பிரிந்து செல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. அப்போது முஸ்லிம் உறுப்பினர்கள் அதிக அளவில் தெரிவு செய்யப்படும் ஏதுநிலை உள்ளது. திருமலை மாவட்ட நிலையும் இதுவே. கடந்த முறை கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர், மிகக் குறைந்த வாக்குகளைப் பெற்றே தெரிவாகும் நிலை இருந்தது. தற்போது கூட்டமைப்பு பிளவடைந்துள்ள நிலையில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இழக்கப்படும் அபாயம் அதிகமாகவே உள்ளது.

2001 காலகட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகளின் முடிவுகளில், ஊடகவியலாளர்களின் செல்வாக்கு அதிகமாக இருந்தது. இன்று அந்த நிலைமை இல்லை. முடிவுகளில் அழுத்தம் தரக் கூடிய விடுதலைப் புலிகளும் இல்லை. இன்றைய தமிழ் ஊடகவியலாளர்களில் அநேகர் கடந்தகால வரலாறை அறிந்து கொள்ளாதவர்களாக அல்லது அறிந்து கொள்ள விரும்பாதவர்களாகவே உள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை வரலாற்றின் மூலம் அன்றாட 'வட்ஸ்அப்' செய்திகளிலேயே உள்ளது. அதனால் அவர்கள் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டை ஆதரிப்பவர்களாக, அவர்கள் கூறும் நியாயங்களை(?) ஏற்பவர்களாக உள்ளனர்.

நான் பெரிதும் மதிக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுள் ஒருவர் சுமந்திரன். ஆனால், அவரின் அண்மைய கருத்துகள், முகம் சுழிக்கச் செய்பவையாக அமைந்திருந்தன. ஆயுதப் போராட்ட இயக்கங்கள் அனைத்தையும் - விடுதலைப் புலிகள் உட்பட - கொச்சைப் படுத்துவதாக அமைந்திருந்த அவரின் கருத்துக்கு, விடுதலைப் புலிகள் எனத் தம்மைப் பிரகடனம் செய்து, நிதி திரட்டலில் ஈடுபடும் தரப்புகளிடம் இருந்து எதிர்ப்பு வராமல் போனது ஆச்சரியத்துக்கு உரிய விடயம். ஈழ விடுதலைப் போராட்டத்தைக் குத்தகைக்கு எடுத்துள்ளதாகப் பிரகடனம் செய்துள்ள சீமான் வகையறாக்களும் வாய் திறக்கவில்லை.

மறுபுறம், மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழசுக் கட்சியின் நிகழ்வொன்றில், ரெலோ உறுப்பினர்களால் நிகழ்த்தப்பட்டதாகச் சொல்லப்படும் கூட்டுப் பாலியல் வல்லுறுவுக்கு, நீதி கேட்கும் கோரிக்கை ஒன்று முன்வைக்கப் பட்டதாகச் செய்திகள் வெளியாகி இருந்தன. அநீதிக்கு எதிராக நீதி கோரும் முயற்சி வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால், குறித்த வேண்டுகோளில் பச்சையான அரசியல் காழ்ப்புணர்ச்சி தென்பட்டதே ஒழிய, மனித உரிமைக்கான, பெண் உரிமைக்கான கோரிக்கையாக அது தென்படவில்லை.

ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் பல பெண்கள் போராட்ட இயக்கங்களாலும், படையினராலும், துணை இராணுவக் குழுக்களாலும் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரது கொலைக்கான நீதி கோரலாக அது இருக்கவில்லை. பாலியல் வல்லுறவு என்ற பட்டியிலில் பார்த்தாலும் அண்மைய எடுத்துக்காட்டாகப் பிள்ளையான் குழுவினரால் கொல்லப்பட்ட, தமிழர் புனர்வாழ்வுக் கழக ஊழியர் பிரேமினியை எடுத்துக் கொள்ள முடியும். அந்தப் பெயரை உச்சரிப்பதன் மூலம் பிள்ளையானின் வெற்றி வாய்ப்பைத் தடுத்துவிடக் கூடாது என சம்பந்தப்பட்டவர்கள் நினைத்தார்களோ என்னவோ?

மொத்தத்தில், எனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை, எதிரிக்குச் சகுனப் பிழை வந்துவிட வேண்டும் என்ற போக்கு, தமிழரசுக் கட்சியை எங்கு கொண்டு சென்று நிறுத்துமோ? தெரியவில்லை.

தமிழரசுக் கட்சியின் தலைவரான தந்தை செல்வா, தனது இறுதிக் காலத்தில் சொல்லிய ஒரு வாசகம் மிகவும் பிரபலமானது. அது "தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்." தற்போது உயிரோடு இருந்திருந்தால் "தமிழரசுக் கட்சியைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" என அவர் சொல்லியிருக்கக் கூடும்.


25 ஆம் ஆண்டில்
Subash
RED LENTILS
ROTE LINSEN
Basmati Rice
5 kg e
Tilda
PURE
SMATI
AAA
Kings
CURRY POWDER
Muthu Samba Rice
PG tips
IMPORTAS
International Foods & Beverages
www.importas.ch
info@importas.ch
மொத்த விற்பனை நிலையம்
Schwaresterstrasse 2, 5604 Hendschiken
Sales : 052 672 28 38, Admin : 052 672 28 34, Fax : 052 672 28 39
info@subash.ch www.subash.ch
Baslerstrasse 102
8048 Zürich
Tel : 043 343 03 55
Fax : 043 343 03 56
Kranichweg 8
3074 Muri bei Bern
Tel : 031 951 24 44
எமது புதிய கிளை
EO Tychboden Parkweg 2
4665 Oftringen
வெகுவிரைவில்...
Kings
Niru
LEELA
Suryaa
LION
Maliban
Double Horse
Tilda
TRS
Aachi
Maggi
PG tips
Rubicon
ELAKKIA
OKF



அன்புச் செல்வன்

# தடுக்க முடியாத சுதந்திரத் தனித் தமிழ் ஈழம்



**எல்லாத் தமினத் துரோகங்களின் ஊற்றுக் கண்ணாக விளங்கிய இவர்கள்தான் ஈழத் தமிழின அழிவிற்கான மூல கர்த்தாக்கள்**

தடுக்க முடியாத சுதந்திர தனித் தமிழ் ஈழம்! அழிக்க முடியாத வரலாற்று உண்மை இது! அப்படி இருந்தும் கூட சிங்களமும், ஆரிய இந்திய மற்றும் 40க்கும் மேலான உலக நாடுகளின் அரசுகளும், மத பீடங்கள் பொருண்மிய மற்றும் மனித உரிமை அமைப்புகளும் தமிழனத்தை அழித்தேனும் தனித் தமிழ் ஈழத்தை இல்லாமல் செய்யப் போராடின.

இலங்கைத் தமிழன் எனச் சொல்லிக் கொண்ட லகஷ்மண் கதிர்காமன், உலக நாடுகளின் தலைவர்களின் கால்களில் விழுந்து, எங்களின் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் உலக மகா பயங்கரவாதிகளாகப் பிரகடனப்படுத்தி, மாபெரும் இன அழிப்பை 21ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடத்த உதவிய தமிழினத் துரோகிகளின் முதல் இடத்தை பெறுகிறார்.

அடுத்த துரோகக் கூட்டத்தை நம்பிய மேதகு தமிழர் தலைவன் பிரபாகரன், தமிழர் விடுதலைக் கூட்டணி எண்கிற அமைப்பைத் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக, ஜனநாயக பிரதிநிதிகளாக உருவாக்கிய வரலாற்றுத் தவறைச் செய்ததால், இவர்கள் புனிதர்களாக நடந்து, இறுதிப் போரின் பொழுது தமது பிறப்பையும், பொறுப்பையும் மறந்து, தமிழன அழிப்பின் முக்கிய சூத்திரதாரியான இந்தியாவுக்கு ஓடிச் சென்று







ஒத்துழைப்புக் கொடுத்து, தன் இனத் துரோகிளான இவர்கள்.

அடுத்து புலிகளோடு போராடிய, புலிகளின் கிழக்குப் பிராந்திய தலைவரும், மேதகு தலைவரின் வலது கரம், நம்பிக்கை நட்சத்திரம் என விளங்கிய முக்கிய

துரோக நாயகன் கருணா என்கிற வினாயக மூர்த்தி

முழுக்க நனைஞ்ச பின்னே முக்காடு எதற்கு? எல்லாத் தமிழினத் துரோகங்களின் ஊற்றுக் கண்ணாக விளங்கிய இவர்கள்தான் ஈழத் தமிழின அழிவிற்கான மூல கர்த்தாக்கள்



1947ம் ஆண்டு இலங்கையின் முதல் பாராளுமன்றத்துக்கான தேர்தலில், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கிய ஜீஜீ.பொன்னம்பலம் தொடங்கிய அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் காங்கேசன் துறைத் தொகுதி வேட்பாளராக திரு.சாமுவேல் ஜேம்ஸ் வேலுப் பிள்ளை செல்வநாயகம் போட்டி இட்டார்.

## அகரம் இப்படித்தான் பிறந்தது

2009 மே மாத தமிழ் இன அழிப்பைச் செய்த இலங்கைச் சிங்கள அரசும், இந்தியா உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட உலக நாடுகளின் அரசுகளும் ஓடி, ஓடி இரவு, பகல் போரிட்டு வெல்ல முடியாமல், உலகின் போர்களில் தடை செய்யப்பட்ட ஆயுதங்களையும், வழிமுறை நெறிகளையும் பயன்படுத்தி நடத்தப்பட்ட முள்ளி வாய்க்கால் இறுதி ஈழத் தமிழின அழிப்பைச் செய்து பெற்ற வெற்றியல், கொக்கரித்து பால் பொங்கல் பொங்கிப் பரிமாறிக் கொண்டாடிய நிலையில், உலகத் தமிழினம் பீதியால் உறைந்து, கண்ணீரில் மிதந்த வேளையில், யேர்மனி டோட்மண்ட் நகரில் சுவிற்சர்லாந்து பேர்ண் மாநிலத்தில் செயற்பட்டு வந்த சுவிஸ் தமிழர் பேரவையின் பிரச்சாரப் பிரிவின் நிலவரம் ஏட்டின் பிரிவில் பெரும் புயலின் கருவாக தனது உறுமலை எழுப்பியது.

அவர் தான் அகரம் மாதாந்த இலவச வெளியீட்டின் அனைத்துமாகச் செயலாற்றி வரும் திரு.இரவீந்திரன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வெளிவராத அதனால் சிலர் மட்டும் அறிந்த போராளி. அவருடைய உண்மைகள் வெளியானால் பல ஆபத்துகளால் பாதிக்கப்படும் நிலை இன்றும் உள்ளது. அப்படி இருந்தும் அவரது துணிச்சலையும், செயல் திறனையும் என்னால் கவனத்தில் எடுக்காமல் இருக்க முடியவில்லை. அதனால் அவருடன் இணைந்து செயற்பட நானும் இணங்கினேன்.



பின்னால் தந்தை செல்வா எனப் பிரபலமடைந்த அவர் பிறந்து, வளர்ந்தது மலேசியாவில். சட்டத்தரணியாகக் கொழும்பில் புகழ் பெற்றவர். அவர் தெல்லிப் பழையைச் சேர்ந்த பரிஸ்டர் குமார குலசிங்கத்தின் மகளை மணம் புரிந்தார் என்பதைத் தவிர, காங்கேசன் துறைத் தொகுதி மக்களுக்கும், மண்ணுக்கும் உறவும் இல்லை, ஒரு மண்ணும் இல்லை. ஜீஜீ அழைத்தாதால் அரசியலுக்கு வந்தவர். ஜீஜீ எழுப்பிய மானமுள்ள தமிழ்ச் சாதி, தமிழன் என்று சொலலாடல் 'தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா' என்பதைத் தமிழ் தேசிய எழுச்சியாகத் தவறாக மக்கள் மனதில் பதிக்கப்பட்டு விட்டது. 10 வயது பள்ளிக் கூட மாணவரான என் போன்றவர்களுக்கு, அந்த எரிமலைக் குமுறல் அன்றைய கொக்கா கோலாவாக இனித்தது.

எல்லாக் கிராம மக்களையும் போன்றே எங்கள் கிராமத்தினரின் அரசியல் அறிவு இருக்கவில்லை. அன்றாட வாழ்வாதாரத்தை எதிர் கொள்வதே பெரிய போராட்டமாக இருந்தது.அதனால் என் போன்ற சிறு பிள்ளைகளின் கூச்சலும், கோசங்களும் கட்சிகளின் தேர்தல் வெற்றிகளைப் பெற்றுக் கொடுத்ததோடு சரி என்கிற யதார்த்தைப் பெரியவர்கள் நன்கே தெரிந்து அமைதி காத்தனர். எமது பள்ளிக் கூட தலைமை ஆசிரியர் படிக்கும் மாணவருக்கு அரசியல் தேவை அற்றது எனப் பேசியும், பயனற்றுப் போனதால் அதற்கும் மேலாக காலம் தன்பாட்டில் சென்றது.வந்தேறி போல வந்த செல்வா தமிழ் மக்களின் பிரிமான தலைவனாக உருகமாக்கப் பட்டார். உண்மைகளை உரைத்துப்




பார்க்கும் தேவையும், அவசியமும் எவருக்கும் இருக்க வில்லை.

அதே போன்ற மாணவர் எழுச்சிதான் 1970களில் இலங்கையில் உருவாகி, 1983இல் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டமாக வெடித்து. 2009 மே 17இல் தமிழின அழிப்பாக மாறியது. இன்று பெரிய பூதமாகப் பார்க்கப்படும் த.தே.கூட்டமைப்பு அன்று வெறும் தேர்தல் வியூகமாக தோற்றம் பெற்றது. அது பற்றிய விவரங்களை 'வெளி வாசல்' என்கிற நுழைவாசலில் காணலாம்.

'எப்படித்தான் அடித்தாலும் தாங்கிறானே இவன் ரொம்ப நல்லவன்டா' என விட்டு விடும் அறிவும், ஈவு தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் எனக் கொத்தடிமைத் தனம் படைத் இரக்கமும் இல்லாத, அரக்க குணம் படைத்த தமிழனப் படுகொலைக் குற்றவாளியான சிங்களப் படைத் தளபதி சரத் பொன்சேகாவை தமிழ் மக்கள் தேர்தலில் வாக்களிக்க வேண்டும் எனக் கொத்தடிமைத் தனம் படைத்த அரசியல் தலைவர்களால், எமது இனம் அழிவுப் பாதையில் பயணிக்க வைக்கப் படுகிறது.

இந்தியாவின் கருணையையும், எதற்கும்உதவாத 13வது திருத்தச் சட்டத்தையும் வருந்தி அழைத்துக் கேட்கும் இவர்களை, தமிழ் மக்கள் எப்படி ஏற்பார்கள்? இந்தியா சொல்கிறது நாங்கள் கேட்கிறோம் எனக் கோமணத்தையும் பறிகொடுத்த பர தேசிக் கூட்டம் சொல்கிறது.

இத்தனை துரோகிகளின் சதிகளின் மத்தியிலும் தமது நிலங்களையும், உறவுகளையும் சிங்களத்திடம் பறிகொடுத்த மக்களும், பெண்களும் தொடர்ந்து போராடி வருவதாலும், புலம் பெயர்ந்த ஈழத் தமிழ் அகதிகளின் 14 வருடத் தொடர் போராட்டங்களால், இப்பொழுது கனடாவின் மக்கள் பிரதிநிதிகள் சபை போர்க் குற்றங்களுக்காக இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகளும், இராணுவ அதிகாரிகளும் மனித உரிமை மீறல் வழக்குகளுக்காகக் கைது செய்து, விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் எனப் பிரகடனப் படுத்தியதோடு, மனித உரிமைகளை மதிக்கும் எல்லா உலக அரசுகளையும் கேட்டுள்ளது.

அப்படியான விசாரணைகள் மூலம் எம் இனம் இழந்த தன் பூர்வீகத் தாய் மண்ணையும், அவற்றின் மீதான சகல உரிமைகளையும் மீளப் பெறும் கட்டத்தை நோக்கி உலகம் பயணிக்கத் தொடங்கி விட்டது. இலங்கையிலும் அறகலய என வெடித்த சிங்கள மக்களின் அரசியல் புரட்சி, மைத்திரி பால சிறி சேன மகிந்த ராஜபக், கோட்ட பாய ராஜபக்ஷ உட்பட பல உயர் அரச காவல்துறை படை அதிகாரிகள் உட்பட, கோடிக்கணக்கான டெலர் மதிப்பான தங்கத்தைத் தண்டப் பணமாக அறவிடத் தீர்ப்பளித்துள்ளது.

இவை எல்லாம் தனித் தமிழ் ஈழம் வெடித்துக் காற்றில் பஞ்சாகப் பறக்கும் இலவங்காய் அல்ல, அது உண்மையான தேன் சுவை தரும் பலாப் பழம் என்பதை, காலம் தமிழர் கரங்களில் தரப் போகிறது.

அதனால் இதுவரை காலமும் பாலைவனத்துக் கோட்டானைப் போன்று பகலிரவாகத் தனித்துக் கதறிய அகரம்; இனி உலகமே தன் பின்னால் அணி திரள்வதைக் கண்டு ஆறுதல் அடைகிறது. அதனால் இனியும் இத்தொடரை தொடரும் தேவை இல்லை என்பதால், இத்தொடரை மன மகிழ்வோடு முடித்துக் கொள்கிறோம்.

எழுக சுதந்திரத் தனித் தமிழ் ஈழம்! வாழ்க என்றும் தமிழரின் தாயகம் !!


பரோட்டா
POROTTA
துருவிய தேங்காய்
SHREDDED COCONUT
பரோட்டா
POROTTA
கடலவடை
PARIPPUVADA
இலங்கை ரொட்டி
CEYLON ROTTI
மலபார் பரோட்டா
MALABAR POROTTA
CHOLAN
சோழன் பொருட்களின்
விநியோகஸ்தகர்
DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழ வகைகள்
மற்றும் உணவுப்பொருட்களை
மொத்தமாக பெற்றுக் கொள்ள
நாடுங்கள்
StaR-Impex
பாலப்பம்
PALAPPAM
சமோசா பொரித்தது
SAMOSA FRIED
உழுந்துவடை
UZHUNNUVADA
இட்லி & சாம்பார்
IDLY WITH SAMBAR
மசாலா தோசை
MASALA DOSA
மலர்பார் பரோட்டா
JUMBO PACK
FROZEN FOOD
Lebensmittel Grosshandel e.K.
Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

சிறுகதை

சபீனா சோமசுந்தரம்

# பெற்ற(வன்) கடன்

**வி**டிந்தால் நடக்கப்போகும் விபரீதத்தை நினைக்க, அவனுக்கு அடிவயிற்றைக் கலக்கியது. விபரீதத்தைத் தடுக்க வேண்டியவனே, அதை நிகழ்த்துபவனாக இருக்கையில் எவ்வாறு அதைத் தடுக்க முடியும்?

“எனக்கு 16 வயசுஆகிட்டு.. நான் ஒன்டும் சின்னப்பொடியன் இல்ல.. என்னால சரியான முடிவுகள் எடுக்க ஏலும்..” என்று அவன் அறிவு அவன் மனதிடம் அடித்துக் கூறியது.

ஆனாலும்; நிம்மதியாக உறங்க முடியவில்லை. உணர்வுகளுக்கு அடிமையாகிப் போன பாவப்பட்ட மனித மனம் என்னதான் செய்யும்? நிலைகொள்ளாமல் நிம்மதியற்று தவிக்கத் தானே செய்யும். வினோத்தினுடைய மனநிலையும் அப்படித்தான் இருந்தது.

அந்த ஊரில் விவசாயம் தான் வாழ்வாதாரம். வினோத்தினுடைய தந்தை சேகர் தோட்டம் செய்யும் விவசாயி. மரக்கறிகள் பயிரிடுவதுதான் அவர்களது வாழ்வாதாரமாக இருந்தது.

இருபது வயதிலேயே பாடசாலை காலத்திலிருந்து, தான் காதலித்த அருந்ததியை யாருக்கும் தெரியாமல் கூட்டிக் கொண்டு போய் திருமணம் செய்து கொண்டான் சேகர்.

இப்போதும் ஏதாவது வாய்த்தர்க்கம் என்றால் “உங்கள்ல இருக்கிற ஆசையில தானே எல்லாத்தையும் விட்டுட்டு உங்களோட ஓடி வந்தன்..” என்று மூக்கைச் சீறுவாள் அருந்ததி.

தாயும், தகப்பனும் சண்டையிட்டு, வினோத் ஒருநாளும் பார்த்ததில்லை. அவனுடைய தகப்பன் சரியான அமைதியான பேர்வழி என்பது அவனுடைய எண்ணம். காரணம் அருந்ததி குரலை உயர்த்தினால், சேகர் பொட்டிப் பாம்பாய் அடங்கி விடுவான்.

அப்படிப்பட்ட தகப்பன் இப்படியொரு காரியத்தைச் செய்வார் என அவன் கனவிலும் நினைக்கவில்லை.

கடந்த இரண்டு வாரங்களாக சேகரின் நடவடிக்கைகள் இயல்பாக இல்லை. அதை அருந்ததி கவனித்தாளோ, இல்லையோ வினோத் அதைக் கவனிக்கத் தவறவில்லை. சேகர் முடிந்தவரை வெளியில் போவதைத் தவிர்த்துக் கொண்டான், வீட்டிலேயே அதிக நேரம் இருந்தான். கணவனுக்கு ஏதோ உடல்நிலை சரியில்லை போல என்று அலட்சியமாக இருந்துவிட்டாள் அருந்ததி.

வினோத்திற்குத் தகப்பன் மீது பாசம் அதிகம். ஆரம்பத்தில் தகப்பனின் நடவடிக்கைகளை சாதாரணமாக எடுத்துக் கொண்டவனுக்கு, நாள் போக போக ஏதோ தவறாக தோன்றியது. தகப்பனுக்குத் தெரியாமல் அவன் செய்த புலனாய்வு, இப்படி ஒரு நிலையில் கொண்டு வந்து விடும் என்று அவன் நினைத்திருக்கவில்லை. அதன்பிறகு சேகரைப் பார்க்கும் போதெல்லாம் வினோத்திற்கு ‘ச்ச்சீ..’



என்றிருந்தது. அதற்குப் பிறகு வந்த ஒவ்வொரு நொடியும், ஆமை போல் ஊர்ந்து கொண்டே இருந்தது அவனுக்கு.

பலவாறு யோசித்தான். ஒரு மகனாக தான் செய்ய வேண்டியது என்ன? என்று ஆழ்ந்து சிந்தித்தான். ஒரு முடிவை எட்டினான். அதற்கான நாளுக்காய் காத்திருந்தான்.

அந்த நாள் வந்தது. பொழுது விடிந்தது. இன்றைய நாளை நினைக்க வினோத்திற்குச் சலிப்புத் தட்டியது. அதோடு மனம் பயத்தில் படபடத்துக்கொண்டே இருந்தது. படுக்கையிலிருந்து எழுந்து வந்தான். அவனுக்குப் பரீட்சைக்குப் படிப்பதற்காக விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. தங்கை பாடசாலைக்குச் சென்று விட்டிருந்தாள்.

“வினோத்து, மதிய சாப்பாடும் சமைச்சி வச்சிருக்கன்.. அப்பாவுக்குச் சுகமில்ல, கொஞ்சம் அவரையும் எட்டிப் பாத்துக்க.. நான் தோட்டத்துக்குப் போயிட்டு வாறன்..” என்று சொல்லி பையை எடுத்துக்கொண்டு அருந்ததி கிளம்பினாள்.

வினோத் கிணற்றிடியில் போய் உட்கார்ந்தான். காலை வெயில் சுளீரென சுட்டது. அந்தச் சூடு அவன் அடிவயிற்றில் புகைந்து கொண்டிருந்த நெருப்பில் வீழ்ந்து பற்றி எரிந்தது போல் ஆவேசமாக எழுந்தான்.

கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனான். தகப்பனின் அறை திறந்திருந்தது. எட்டிப் பார்த்தான் வினோத். சேகர் கட்டிலில் அமர்ந்து எதையோ யோசித்துக் கொண்டிருந்தான்.

வினோத் அறைக்குள் போய் சேகரின் கால்மாட்டில் அமர்ந்தான். வினோத் இப்படி வந்து அமர்ந்திருப்பதைப் பார்த்த சேகருக்கு பயம் தொற்றிக்கொண்டது. யாருக்கும் தெரியாவிடினும் மனச்சாட்சி என்ற ஒருவன், நம் கூடவே இருக்கிறானே. அவனுக்கு மறைத்து எதை தான் செய்து விட முடியும்?

குனிந்திருந்த வினோத்தின் முகத்தை சேகர் பார்த்தான் தயக்கத்தோடு. எல்லாமோ அல்லது எதையோ தெரிந்து கொண்டு தான் மகன் வந்திருக்கிறான் என்பது மட்டும் சேகருக்கு உச்சி மண்டையில் சுத்தியலால் அடித்தது போல் விளங்கியது.

வினோத் நிமிர்ந்தான். அவனுடைய அந்தப் பார்வையும், பார்வையில் தெரிந்த ஏமாற்றமும் தனது உயிரை உறிஞ்சி வெளியே துப்பியது போல் இருந்தது சேகருக்கு.



"த.. தம்பி.. வி.. னோ.." என்று சொற்கள் தடுமாறி, பேச முடியாமல் நா தடுமாறியது சேகருக்கு. தான் செய்துவிட்ட தவறுக்காக சேகர் கலங்கவில்லை. அவனது குரூர மனம் அதைத் தவறென்றே உணரவில்லை. அது வெளியே தெரிந்துவிடக் கூடாது என்ற பயத்தில் தான் இவ்வளவு நாளும் யோசித்துக் கொண்டு திரிந்தான்.

ஆனால், இப்போது அதைத் தெரிந்து கொண்டு வந்திருப்பவன் ஒரு மூன்றாம் மனிதனல்ல, அவன் பெற்ற பிள்ளை என்பதை உணர்ந்த அந்த நொடி, சேகர் அவமானத்தில் கூனிக்குறுகி போனான்.

வினோத்திற்கு தகப்பனிடம் பேச தயக்கமாக இருந்தது. தன்னை பெற்று, கேட்டதையெல்லாம் வாங்கி கொடுத்து அன்பையும், அக்கறையையும் அள்ளிக் கொடுத்த ஈன்றவனைதான் எப்படி கேள்வி கேட்க முடியும்?

ஆனால்.. அவன் செய்த காரியம்? அதை மன்னித்துவிட்டால் வாழ்நாள் முழுவதும் குற்ற உணர்ச்சியோடு வாழ வேண்டுமே!. தைரியத்தை வரவழைத்துக் கொண்டான். கைகள் நடுங்கியது அவனுக்கு. மெல்ல தகப்பனின் கால்களைப் பிடித்தான் வினோத்.

இதை சற்றும் எதிர்பாராத சேகர், மகனின் கைகளிற்குள் சிக்கிய தனது கால்களை வெடுக்கென இழுக்க முயன்றான். ஆனால் வினோத்தின் பிடி இறுகியது. தகப்பனின் காலைப் பிடித்துக்கொண்டு அழுதான் வினோத்.

"எனக்கு எல்லாம் தெரியுமப்பா.. ஏம்பா இப்பிடி செய்தீங்க..? இது வெளில தெரிஞ்சா..? அம்மாவுக்கு தெரிஞ்சா..?"

சேகர் எதையோ சொல்ல முயல, வினோத் அவனை பேச விடவில்லை. தகப்பனிடமிருந்து ஒரு வார்த்தையையும் அவன் கேட்க விரும்பவில்லை. சேகரின் காலைப் பிடித்துக் கொண்டு அழுது கொண்டிருந்த வினோத் நிமிர்ந்தான். சிவந்த கண்களோடு தன்னைப் பார்க்கும் மகனைப் பார்க்க, சேகருக்கு ஐம்புலனும் செயலிழந்து போனது போல் இருந்தது.

16 வருடங்களுக்கு முன் தன் கைகளில் ஏந்திய தன் பிஞ்சு மகன் இன்று, நெஞ்சை நிமிர்த்தி ஓர் ஆண்மகனாக வந்து நிற்கையில்தான் சேகர் தன் தவறை நினைத்து கூனிக்குறுகி போனான். எழுந்து மகனின் கையை பிடித்துக்கொண்டு அழுதான்.

"ஏதோ புத்தித் தடுமாறு இப்பிடி செய்திட்டன்.. உங்கம்மாவுக்கு தெரிஞ்சா.. ஊருக்குள்ள தெரிஞ்சா.. நான் என்ன செய்வேன்..? ஐயோ.." என்று தலையில் அடித்துக் கொண்டுக் கதறினான் சேகர்.

தன் கைகளைப் பற்றியிருந்த தகப்பனின் கைகளை உதறிவிட்டு, "இப்ப கூட வெளிய தெரிஞ்சா என்ன செய்யிறது என்டுற பயம் தான்.. நீங்க செஞ்சது சரியா அப்பா? ஏம்பா.. அந்தப் பிள்ளயும் என் தங்கச்சி மாதிரி தான்பா.. அப்பா.. அந்தப் பிள்ள பாவமில்லையாப்பா.. அந்த நேரத்தில நீங்க பெத்த மகளோட ஞாபகம் கூட வரலயாப்பா உங்களுக்கு..?"என்று கேட்டு அழுதான் வினோத்.

**(தொடரும்)**





மாபெரும்
ராஜ
முத்திரை
வாடிக்கையாளர்களின்
பேராதரவுடன்
21ஆம் ஆண்டில்....
SK
SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
ADLER STR. 33, 44137
DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

பாகம் : 33

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

மரபு, பண்பாடு, விழுமியம், வரலாறு, மொழி என்பன ஓர் இனத்தின் அடையாளங்கள் ஆகும். இவையே அவ்வினத்தின் இருப்புக்கான ஆணிவேராக அமைகின்றன. தமிழினம் இவ்வடையாளங்களை மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் சுமந்து வருகின்றது. இவற்றை, புலம்பெயர் நாட்டில் நாம் இழந்து விடக் கூடாது என்பதற்காகவும், இவற்றை எமது அடுத்த தலைமுறை அறிய வேண்டும் என்பதற்காகவும் 1993 ஆம் ஆண்டு கனடாத் தமிழ்க் கல்லூரி உருவாக்கம் பெற்றது."

அடிப்படையில் நமது அடையாளத்தைக் காப்பதுதான் தமிழ்க் கல்வியின் முதன்மை குறிக்கோள். இது நமக்கு மட்டும் உள்ள சிக்கல் அல்ல, புலம்பெயர் நாடுகளில் அடையாளத்தை எவ்வாறு காப்பது? என்பதற்கு சிறந்த உதாரணம் யூதர்கள்தான். அவர்களின் கல்வி முறைகளிலிருந்து நாம் என்ன கற்கலாம்? என்பதைச் சுருக்கமாக ஆராய்வதுதான் இக்கட்டுரையின் நோக்கம். அவர்களின் சிந்தனை, நமது சிந்தனையுடன் ஒப்பிடும்பொழுது முற்றிலும் மாறுபட்டது. கீழுள்ள இரண்டு கேள்விகளுக்கு நாமும் அவர்களும் எப்படி விடையளிக்கிறோம் என்பது சுருக்கமாக விளக்கும்.

**கேள்வி :** எந்த ஊரில் குடியிருக்கக் கூடாது?

**தமிழர்கள் :** கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்.

**யூதர்கள் :** பள்ளி இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்.

*"There was a stern prohibition against living in a town which was not provided with a school."*

**கேள்வி :** நாட்டைக் காப்பவர்கள் யார்?

**தமிழர்கள் :** நல்ல அரசன்.

**யூதர்கள் :** நல்ல ஆசிரியர்கள்.

யூதர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளாக அவர்களுக்கென்று ஒரு நாடு இல்லாவிட்டாலும், மொழியை மறந்து விட்டாலும், அவர்கள் தங்களது அடையாளத்தைக் காத்தது மட்டுமில்லாமல் இழந்த நாட்டையும், மறந்த மொழியையும் மீட்டு விட்டார்கள். அதற்கு அடிப்படையாக அமைந்தது அவர்களின் யூதக் கல்விமுறை. அதிலிருந்து மூன்று முக்கிய பாடங்களை முன்வைக்கிறேன்.



## யூதர்களின் கல்விமுறையிலிருந்து தமிழ்க் கல்விக்கான சில உத்திகள்

இன அடையாளத்தை வரலாற்றுக் கதையாற்றல் ***(Historical Narrative)*** மூலமே சிறப்பாகக் காக்க முடியும். ஓர் இனம் என்பது, ஒரு பெரிய கற்பிதக் குடும்பம். அவர்கள் ஒரு பொதுவான மரபுவழியில் வந்தவர்கள் என்ற நம்பிக்கையாலும் (உண்மையாக இருக்கவேண்டிய அவசியமில்லை), பொதுவான வரலாற்றுக் கதையாற்றல், பொதுவான பண்பாடு ஆகியவற்றின் மூலம் ஒரு குழுவாக இணைக்கப்படுகின்றனர். இந்த வரலாற்றுக் கதையாற்றல் யார் குழுவின் உறுப்பினர்? யார் இல்லை? இனக் குறியீடுகள், இனத்தின் பொற்காலம், இறந்த காலம், அழிவு காலம், எது புனிதம்?, எது பூர்வீகம்?, யார் மாவீரர்கள்?, யார் எதிரிகள்? ஆகியவற்றை உள்ளடக்கி, இன அடையாளத்தின் மையமாக இருக்கிறது. இந்தக் கதையாற்றல் மூலம்தான் நிலத்தைக் காக்கவேண்டும், அடையாளத்தை காக்கவேண்டும், மொழியைக் காக்கவேண்டும், மாவீரர்களைப் போற்ற வேண்டும், எதிரிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமும், உணர்வுகளும் வருகிறது.

யூதர்கள் தங்கள் அடையாளத்தைக் காக்க முடிந்ததின் இரகசியம் என்பது, அடிப்படையில் அவர்கள் வரலாற்றுக் கதையாற்றலைக் கற்பிப்பதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்ததுதான். யூதக்கல்வி முறையில் வரலாற்றுக் கதையாற்றல்தான் ஒரு குழுவின் அடையாளத்துக்கும், ஒற்றுமைக்கு அடிப்படை. வரலாற்றுக் கதையாற்றலை உள்வாங்குவதுதான் முக்கியம் என்பதால், அது குழந்தைகளுக்கு எந்த மொழியில் புரியுமோ, அதில் கற்பிக்கப்பட்டது.

அவர்களின் ஈப்ரு மொழியை ஒரு பண்பாட்டுக் குறியீட்டு மொழியாக கற்பித்தார்கள். அவர்களுக்கு அடிப்படையில் அதில் பிரார்த்தனை செய்யவும், எழுத்துகளை அடையாளம் காண்பது, ஓரளவு எழுத்துக்கூட்டி படிக்கவும் கற்றுக் கொடுத்தார்கள். ஆனால், அனைவருக்கும் படித்து முழுதாகப் புரிந்து கொள்ளவோ அல்லது பேசவோ தெரியாது. அவ்வாறு இருந்தாலும், அவர்களின் ஈப்ரு மொழி உயர்வானது என்ற உணர்வுகள் கதையாற்றல் மூலம் கற்றுத்தரப்பட்டன. இது வடமொழியைப் போல, வழக்கொழிந்தாலும், கதையாற்றல்களால் உயர்வாகக் கருதப்பட்டது.

முடிவில் அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தபொழுது, யூதர்கள் இழந்த நாட்டையும், இறந்த ஈப்ரு மொழியையும் மீட்டுவிட்டார்கள். இந்துத்வ குழுக்களும் அவ்வாறு வடமொழியை மீட்க முயற்சி செய்கின்றன. ஒரு மொழி வாழ்வதற்கு மக்களின் மனதில் அதன் தகுதி என்ன? என்பதுதான் முக்கியம் என்கிறது




ஆராய்ச்சி முடிவுகள். மொழிக்குத் தகுதி இருந்தால், இறந்த மொழியை மீட்டு விடலாம். தகுதி இல்லாவிட்டால், இருக்கிற மொழியும் இறந்துவிடும்.

புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களிடம், மொழியை மட்டும் நாம் கற்பிக்க முனைந்தால் தோல்வி ஏற்படலாம். வரலாற்றுக் கதையாற்றலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நமது பூர்வீக நிலங்களில் தமிழ் கற்பிக்கப்பட்டாலும், நமது வரலாற்றுக் கதையாற்றல் கற்பிக்கப் படுவதில்லை. இதனால் தமிழ் ஒரு தாழ்வான மொழியாகக் கருதப்பட்டு, தமிழ் மொழியும், தமிழ்வழிக் கல்வியும் அழிந்து வருகிறது. வரலாற்றுக் கதையாற்றல் குழந்தைகளின் மனதில் பதிந்து, அவர்களின் உணர்வுகளுடன் கலந்து, அடையாளத்தைக் கொடுக்கிறது. மொழி ஒருவரது அடையாளத்தில் கலந்துவிட்டால், அதை இழிவாகக் கருதமுடியாது.


அவ்வாறு இழிவாகக் கருதினால், தன்னையே இழிவாகக் கருதுவதற்கு ஒப்பாகும்; இது நடக்க முடியாத காரியம். வரலாற்றுக் கதையாற்றலால் தமிழையும், தமிழ்வழிக் கல்வியையும், தமிழர் அடையாளத்தையும், இழந்த நாட்டையும் மீட்க முடியும் என்பதை உணர வேண்டும். இதுதான் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய பாடம். அதற்காக நாம் அவர்களைப் போல் மொழியை விட்டுவிட வேண்டியதில்லை. அவர்கள் இருந்த நிலைமையில் நாம் இல்லை. தமிழ்க்கல்வி என்பது வரலாற்றுக் கதையாற்றலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து சேர்த்து கற்பிக்கப்பட வேண்டும்.

யூதர்களின் வரலாற்றுக் கதையாற்றல் பெரும்பாலும் மதம் சார்ந்தது, ஆனால் கதையாற்றல் எல்லாம் மதம் சார்ந்து இருக்க வேண்டிய அவசியமில்லை. அவை மதசார்பற்ற உண்மையின் அடிப்படையிலும் அமைக்கலாம். சொல்லப்போனால் மதங்களே தங்களை உண்மை என்று கூறியே மக்களை ஈர்க்கிறது. மேலும், மதச்சார்பின்மை என்பது இறைமறுப்பு அல்ல, அனைத்து மதங்களைச் சமமான பார்வையில் எடுத்துக் கொள்வதே. நம்மால் மதசார்பற்ற, உண்மையான கதையாற்றலைக் கொண்டு யூதர்களைப் போல செய்யமுடியும்.

தமிழ்க் கல்வியில் படிக்கும் மாணவர்கள், அவ்வழியில் படிக்காத மாணவர்களைவிட வாழ்வில் அதிக வெற்றிகளை ஈட்டவேண்டும்.

**(தொடரும்)**






யேர்மன் நாட்டில் ஆடைகளின் ராணி நவநாகரீகத்தில் மகாராணி
Jasmine Silk House
2023ஆம் ஆண்டின் புதிய டிசைன்களில்,
சாரி வகைகள், பஞ்சாபி வகைகள்,
சிறுவர்களுக்கான ஆடை வகைகள்
மற்றும் அனைத்து கவறிங் நகைகளையும்
பெற்றுக் கொள்ளலாம்
Fester Str.50, 40882 Ratingen
Tel : 021 028 447 44
Mob. : 0173 1937 325
எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 10.00 முதல் மாலை 8.00 வரை திறக்கப்படும்

பூமிபுத்திரன்



# கலைஞரின் பேனாவும் வஞ்ச எதிர்ப்பும்..



முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதியின் மக்கள் பணியைக் கௌரவிக்கும் முகமாக, சென்னை மெரீனா கடற்கரையில் பேனா வடிவிலான ஒரு நினைவுச் சின்னத்தை அமைக்கும் முயற்சியில் தமிழ்நாடு மாநில அரசு இறங்கியுள்ளது. ஐந்து முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பணியாற்றிய கலைஞரின் வரலாற்றுச் சாதனைகளை நினைவில் கொண்டிருப்போர், அந்தச் சாதனைகளால் தாம் அடைந்த பயன்களை நினைத்துப் பார்ப்போர், தாம் மாத்திரமன்றி தமது சந்ததிகளும், ஒட்டு மொத்தத் தமிழ்நாடுமே அடைந்துள்ள முன்னேற்றத்தைச் சீர்தூக்கிப் பார்ப்போர், குறித்த முயற்சிக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்து நிற்கின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தந்தை பெரியாரின் வழிவந்த கட்சியைத் தமிழின விரோதக் கட்சி என்ற வரையறைக்குள் வைத்து விமர்சனம் செய்வோரும், கலைஞரின் சனாதன எதிர்ப்பு நிலைப்பாட்டால் சங்கடங்களுக்கு ஆளானோரும், குறித்த முயற்சிக்கு தமது எதிர்ப்பையும், கண்டனங்களையும் பதிவு செய்துள்ளனர். அண்மைக் காலமாகத் தனது சனாதன ஆதரவுக் 'கொண்டையை' மறைத்துவிட முடியாமல் தவிக்கும் சீமான், ஒருபடி மேலே சென்று, எதிர்ப்பையும் மீறி பேனா சிலை அமையுமாயின், அதனை உடைப்பேன் எனவும் கூறியுள்ளார்.

1967ஆம் ஆண்டின் பின்னான திராவிட ஆட்சி என்ற வரையறைக்குள் அடக்கப்படும் இன்று வரையான ஆட்சிக் காலத்தில் 7 பேர் தமிழ் நாட்டின் முதலமைச்சர்களாகப் பதவி வகித்துள்ளனர். பேரறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர்., செல்வி ஜெயலலிதா, ஓ. பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிச்சாமி மற்றும் தற்போதைய முதலமைச்சர் ஸ்டாலின். இவர்களுள் சமூகநீதி அடிப்படையிலான ஆட்சியை வழங்கியதுடன், முன்மாதிரியுடன் கூடிய பல்வேறு அரசாணைகளை வெளியிட்டு, தந்தை பெரியாரின் வாரிசு எனச் சொல்லக்கூடிய ஆட்சியை வழங்கிய ஒருவர்

கருணாநிதி மாத்திரமே!. இன்று தமிழ்நாடு தொழில்துறையிலும், கல்வி, மருத்துவம் உள்ளிட்ட அடிப்படை வசதிகளிலும், சமூக நல்லிணக்கத்திலும் இந்தியாவிலேயே முன்னேறிய ஒரு மாநிலமாக உள்ளது என்றால், அது கலைஞரின் கைவண்ணமே!.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாத்திரம் கலைஞர் தனது அரசியலைக் குறுக்கிக் கொள்ளவில்லை. அவர் தேசிய அளவிலும் அரசியலில் கவனம் செலுத்தினார். பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பில் யாரை அமர்த்துவது என்பது கலைஞரின் முடிவாக இருந்தது. இந்திய அரசியலில் பெரிதும் மதிக்கப்பட்ட ஒரு தலைவராக விளங்கிய கலைஞர், தனது சொந்த மாநிலத்தில் எப்போதுமே விமர்சனங்களையும், நெருக்கடிகளையும் சந்தித்துக் கொண்டே இருந்தார். எது வரினும் அவர் துவண்டதில்லை. தோல்வி பற்றிய அச்சமே அவரிடம் இருந்ததில்லை. பீனிக்ஸ் பறவையைப் போல அவர் மீண்டும், மீண்டும் எழுந்து வந்ததையே நாம் தொடர்ச்சியாகப் பார்த்து வந்திருக்கிறோம்.

இன்று தமிழ் நாட்டில் தி.மு.க. ஆளுங் கட்சியாக இருக்கின்றது என்பதற்கும் அப்பால், தமிழ் நாட்டு மக்களின் பெருவிருப்பைப் புரிந்து கொண்ட நிலையிலேயே கலைஞரின் நினைவுச் சின்னம் தொடர்பான விடயத்தைப் பார்க்க வேண்டும். கலைஞருக்கான ஒரு நினைவுச் சின்னம் எனும்போது பேனாவைத் தெரிந்தெடுத்திலேயே இந்தத் திட்டத்தின் பின்னால் உள்ளவர்களின் தெளிவான சிந்தனை புரிகின்றது. கலைஞர்; மக்களின் தலைவர், சமூக நீதியின் காவலர், ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதி. அடிமட்டத்தில் இருந்து கடின உழைப்பின் மூலம் உயர்ந்த ஒருவர். எழுத்துப் புரட்சியாளர்.

இந்த உண்மைகளை நன்கு தெரிந்திருந்த போதிலும், அவரது நினைவுச் சின்னத்தை எதிர்ப்பவர்கள்; சூழலியல் காவலர்கள் போலத் தங்களைக் காட்டிக் கொள்ள முயற்சிக்கிறார்கள். உண்மையில் அவர்களின் கரிசனைச் சூழலியல் பற்றியதல்ல.

ஸ்டாலின் முதலமைச்சராகப் பதவியேற்ற தருணத்தில், பா.ஜ.க. மூத்த நிர்வாகியான எச்.ராஜா பேசிய ஒரு காணொளியை அனைவரும் பார்க்க முடிந்தது. "கருணாநிதியை விடவும் ஸ்டாலின் ஆபத்தானவர்" என்ற அவரது கூற்றில் கருணாநிதி தொடர்பான பார்ப்பனர்களின் பார்வையைத் தெட்டத் தெளிவாகப் பார்க்க முடிந்தது. இத்தனைக்கும் தமிழ் நாட்டில் இன்றுவரை பார்ப்பனர் என்றதற்காக, ஒருவர் தாக்கப்பட்டார் என்ற வரலாறு கிடையாது. ஆனாலும், கருணாநிதி மற்றும் அவரின் அரசியல் வாரிசான ஸ்டாலின் ஆகியோர் ஆபத்தானவர்கள் என வர்ணிக்கும் பார்ப்பனச் சிந்தனை குறித்து நிற்கும் 'ஆபத்து' என்ற பதம் சுட்டுவது ஒன்றேயொன்றே. அது தி.மு.க. ஆட்சி பார்ப்பன மேலாதிக்கத்துக்கும், ஆரியச் சிந்தனைக்கும், அதன் அடிநாதமான சாதிய ஏற்றத் தாழ்வுக்கும் எதிரானது என்பதே!.

இதனையே தந்தை பெரியாரின் வார்த்தைகளில் சொல்வதானால், "உன் எதிரி உன் நடவடிக்கைகளால் ஆத்திரம் கொள்கிறான் என்றால், நீ சரியான பாதையில் செல்கிறாய் என்பதே அர்த்தம்." கலைஞரின் பேனா வடிவிலான நினைவுச் சின்னத்துக்கும் இந்தக் கூற்று மிகவும் பொருந்தும்.

இந்தப் பின்னணியில் சத்தியம் தொலைக்காட்சியில் ஊடகர் முக்தார் அவர்களின் 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் சீமானின் அரசியல் ஆசானான வியனரசு கலந்து கொண்ட நேர்காணல் கவனம் பெறுகிறது. கலைஞரின் சாதனைகளை முக்தார் பட்டியிலிட்ட போதில், அவற்றை மறுத்துப் பேச முடியாமலும், பதில் சொல்ல முடியாமலும் நேர்காணலில் இருந்து அவர் வெறியேறி இருந்தார். கலைஞரின் பேனா வடிவ நினைவுச் சின்னத்தை எதிர்ப்போர் இவ்வாறு நேர்காணலில் மாத்திரம் இருந்து மட்டுமன்றி, அரசியலில் இருந்தே வெளியேற்றப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள கலைஞரின் சாதனைகளை ஏற்றுக் கொண்டோர் தொடர்ந்தும் முன்வர வேண்டும்.

Smt. விதியா மயூரன், சுவிஸ்



## 16. ஸர்பசீர்ஷ விநியோகஹ

சந்தனே புஜகே மந்த்ரே ப்ரோக்னே போஷணாதிஷு / தேவஸ்ய உதகதானேஷு ஆஸ்பாலே கஜகும்பயோஹோ // புஜஸ்தானேது மல்லானாம் யுஜ்யதே ஸர்பசீர்ஷகஹ /

### கருத்து

| | |
|---|---|
| சந்தனே | சந்தனம் |
| புஜகே | பாம்பு |
| மந்த்ரே | கீழ்ஸ்தாயி (மந்தமான குரல்) |
| ப்ரோக்ஷனே | நீர் தெளித்தல் |
| போஷணாதிஷு | பராமரித்தல் |
| தேவஸ்யஉதககதானேஷு | தேவதர்ப்பணம் |
| ஆஸ்பாலே | தட்டி கொடுத்தல் |
| கஜகும்பயோஹோ | தட்டி கொடுத்தல் |
| புஜஸ்தானேது மல்லானாம் | மல்லர்களின் தோள் |



**யுஜ்யதே ஸர்பசீர்ஷகஹ**

## 17. ம்ருகசீர்ஷ விநியோகஹ

ஸ்திரீணாமர்தே கபோலேச சக்ர மர்யாத யோரபி / பீத்யாம் விவாதே நேபத்யே ஆஹ்வானேச த்ரிபுண்ட்ரகே // ம்ருகமுகே ரங்கவல்யாம் பாதஸம்வாஹனேததா/ ஸஞ்சாரேச ப்ரியாஹ்வானே யுஜ்யதே ம்ருகசீர்ஷகஹ //

### கருத்து



| | |
|---|---|
| ஸ்திரீணாமர்தே | பெண்கள் |
| கபோலேச | கன்னம் |
| சக்ர | சக்கரம் |
| மர்யாதயோரபி | எல்லை |
| பீத்யாம் | பயம் |
| விவாதே | விவாதம் |
| நேபத்யே | ஆடை ஆபரணம் அணிதல் |
| ஆஹ்வானேச | அழைத்தல் |
| த்ரிபுண்ட்ரகே | நெற்றியில் நாமம் இடுதல் |
| ம்ருகமுகே | மானின் முகம் |
| ரங்கவல்யாம் | கோலமிடுதல் |
| பாதஸம்வாஹனேததா | பாதங்களை அமுக்குதல் |
| ஸஞ்சாரேச | நடத்தல் (அடிவைத்து) |
| ப்ரியாஹ்வானே | பிரியமானவர்களை அழைத்தல் |

**யுஜ்யதே ம்ருகசீர்ஷகஹ**


V BOX
ONE MONTH FREE
TALK TIME TO 132
COUNTRIES, INCLUDING
INDIA AND SRILANKA,
FOR EVER
V BOX PURCHSED
IN GERMANY.
SUPER
SALE
IN GERMANY
119 €
CALL ONLY
+49 1514 6978484
BIGG BOSS
6
Disney+ hotstar

சர்மிலா வினோதினி

**சென்ற மாத தொடர்ச்சி...**

# ஆனைவிழுந்தான்
## அறியப்படாத பக்கங்கள்
### பாகம் - 2

1983 இல் எழுந்த 'கறுப்பு யூலை' இன வன்முறை, அவர்களை அங்கிருந்து துரத்தியது. கிளிநொச்சிக்கு வந்திறங்கி, அங்கிருந்து அக்கராயனுக்கு அழைத்து வரப்பட்டு, ஆனைவிழுந்தான்குளப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர், அவர்களுக்காக ஒன்றரை ஏக்கர் அதே காணியும், இரண்டு ஏக்கர் வயல் காணியும் ஒதுக்கி குடியேற்றியது அரசு.

"ஏம்மா, அப்போ இப்ப இருக்குற மாதிரி பஸ் எல்லாம் கிடையாது, நடந்தே வருவம் மகள். நாங்களே எங்கட கையால இந்த காடுகளப் புடுங்கி, வேலி அடைச்சு, வீடு கட்டி, பயிர்-கொடி எல்லாம் வச்சம். உதோ உந்தப் பள்ளிக்கூடத்தக் கட்டி கரும்பலக எல்லாத்தயும் நாங்களே வச்சம். ஆனா இப்ப எங்களுக்கு இருக்க ஒரு வீடு தரமாட்டம் எண்டுறாங்க" எழுபதுகளை நெருங்கும் ஒருதாயின் குமுறல் இது.

1983களில் அந்தக் கிராமம் ஆரம்பிக்கப் படுகிற போது, குடியேறிய 73 குடும்பங்களின் சாட்சியாக, எஞ்சி நிற்கிற ஒன்பது முதியவர்கள் தங்கியிருப்பது மண்சுவர் கொண்ட ஓலைக் குடிசைகளில். அதுதான் அவர்களது ஆதங்கம், கிராமத்தை உருவாக்கியவர்களே ஏதிலிகளாக்கப்படுகிற போது எழுகிற மனச்சுமை அது.

மழை பெஞ்சா காணும்மா, முத்தம் தெரு எல்லாம் வெள்ளம் நெறைஞ்சிரும், தண்ணீல நனைஞ்சுக் கொண்டு வாழ வேண்டியதுதான்.

"ஏம்மா நாங்கள் வயசான ஆக்கள். எண்டா எங்களுக்கு வீட்டுத்திட்டம் தரப்படாதா என்ன?"

அந்தப் பெண்மணி கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்ல என்னிடம் சொற்கள் இருக்கவில்லை.


"தனிய இருக்கிறீங்கள், செலவுக்கு என்ன செய்வியள்"? இது நான்.

"நாலைஞ்சு தென்னை இருக்குது. தேங்காய் புடுங்கிக் குடுப்பன், முட்டையும் விப்பன், ஒரு மாரிசமாளிச்சுப் போடுவன்" அம்மா.

அவருடைய குரலில் அப்படியொரு நம்பிக்கை தெரிந்தது. எங்களுக்குத்தான் வாழ்வின்மீது எத்தனை எத்தனை புகார்கள்.

"அப்ப உங்களுக்கு பிள்ளையள் இல்லையா"? நான் தொடர்ந்தேன்.

காந்திருந்தவரைப்போல அவரை முந்திக்கொண்டு இன்னும் ஒரு பெண்மணி தொடர்ந்தார், "எனக்கு அபிள்ளையள் இருக்கிறாங்க. ஒரு மகனோடதான் இப்ப இருக்கிறன். எங்கட அவருக்கு ஏலாது,





கடைசி மகன பாக்க மிச்சம் விருப்பம். ஆனா அவர 2009 இல ஓமந்தையில ஒப்படைச்சம். ஆனா இன்னும் வரல்ல, தேடிக்கிட்டு இருக்கம், கடைசி மகன், அவர் இருந்தா அவரோட இருப்பன் நான், பாத்துக் கொள்ளுவார்." கதைத்தபடி வலக்கையால் இடக்கையை தூக்கியபடி இன்னும் ஏதோ சொல்ல முயன்றார்.

'என்ன'? என்பதுபோல் கைகளைப் பார்த்தேன். எண்பத்தி மூன்றின் அடையாளம் என்றறிந்தேன், அந்தக் கையை அவரால் தூக்கி அசைக்க முடியாதநிலை, ஆக இரண்டு கைகளிருந்தும் ஒற்றைக்கை வாழ்வு.

எதுவரைக்கும் தொடரப் போகிறது இந்தத் துயரம்? 18ம் நூற்றாண்டு,? 1948? 1957? 1983? 2009?

விடை தெரியவில்லை.

"செலவுக்கு என்ன செய்வீங்கள்"? என்னுடைய இந்தக் கேள்வி அங்கிருந்த பலருக்கும் பதில் சொல்லத் தூண்டியிருக்க வேண்டும் என்றுதான் நினைக்கிறேன்.

"எனக்கு முதியோர் உதவித்தொகை இரண்டாயிரத்து ஐநூறு ரூபா தருவாங்க. அதவச்சுத்தான் சமாளிக்கிறன், உவங்க ஆமிக்காரங்க பாவம் எண்டு சிலவேளை ஏதும் காசு தருவாங்க." சொல்லியபடி மெல்லத் தன்னுடைய குரலைத் தாழ்த்தி, வாயைப் பொத்தியதையும், கண்டும் காணாமல் கதைக் கேட்டுக் கொண்டிருந்தேன். உணர்ச்சி பொங்க அரசியல் பேசுவது மட்டும் நம் வேலையல்ல, உணவுக்காக, இருப்பிற்காக இறைஞ்சுகிற மக்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும் என்று உரக்கச் சொல்ல வேண்டும்போல ஒரு குரல் எழுந்து மெல்ல அடங்கியது.

இப்போது நாங்கள் ஆரம்பத்தில் சொன்ன குளத்தடிக்கு வருவோம். இந்தக் குளத்திற்குகீழ் வருகிற வயல் நிலங்கள் 1983 இல் குடியேற்றப்படுகிற போது, தலா இரண்டு ஏக்கர்கள் வீதம் வழங்கப்பட்ட சுமார் 620 ஏக்கர் நிலம். ஆரம்பத்தில் இந்த நிலத்தில் பயிர் செய்திருக்கிறார்கள். அதற்கானஅத்தனை நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் உட்பட்ட அனைத்து எச்சங்களும் காடுகளாகிக் கிடக்கிறது.



இடப்பெயர்வுகளும், யுத்த சூழ்நிலைகளும் ஆவணக் கையளிப்புக்களைப் பின்தள்ளியிருக்கிறது, நிலம் மீட்க முடியாத நிலை, பயிர் செய்து பசியாற முடியாத நிலை. காணி ஆவணங்களைக் கோருகின்றன திணைக்களங்கள், பல அரசியல்வாதிகளின் கதவுகளையும் தட்டியிருக்கிறார்கள் கிராம வாசிகள், முயற்சிகள் எல்லாம் இழுபறி.

இவற்றின் விளைவாக வேலையற்ற நிலை, வறுமை, பசி, பட்டிணி, முறையற்ற சட்ட விரோத மரம் கடத்தல், மண் அகழ்தல் தொடக்கம், மதுபான உற்பத்தி வரை எல்லாம் நிகழ்ந்துவிடத் தொடங்கியிருக்கிறது.

"உந்தா உதில போற பொடியங்கள கவனியுங்க தங்கச்சி. எல்லாம் கசிப்பும், கஞ்சாவும் அடிக்கிற ஆக்கள்" என்று காட்டினார் கூட வந்த பெரியவர்.

மீசை அரும்பும் பருவம், சில வேட்டை நாய்களோடு கடந்து சென்று கொண்டிருந்தார்கள், அவை என்னையும் முகர்ந்து பார்த்தபடி குளக்கட்டில் நகர்ந்தன.

"காவல் துறையின் உதவியை நாட முடியாதா?" என்றேன்.

"எங்க தங்கச்சி! நாங்கள் போன் பண்ணினா, அவங்கள் இவங்களுக்குச் சொல்லிப் போட்டு அவ றாங்கள், சாட்டுக்குப் பிடிச்சிற்றுப்போய் காச வாங்கீற்று அடுத்தநாள் வெளிய விடுறாங்கள். உந்தா குளக்கட்டுக்கு அங்கால தெரியிற காட்ட பாருங்க, அங்க பெரிய பாலை மரங்கள் எல்லாம் நிலத்தில கிடக்குது, எல்லாம் வெட்டையாகீற்று.

உயர்ந்திருந்த அந்தக் குளக்கட்டில் நின்றபடி விழித்திரைகள் விரியும் வரை தூரத்தில் பரந்திருந்த அந்தக் காட்டைப் பார்த்தேன், கானகத்தின் அழுகுரல் காதுகளில் கேட்பதைப்போல இருந்தது.

**முற்றும்**

கல்லெறி வேலுப்பிள்ளை

# "என்ன கொடுமை சரவணா!"



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. போன வருசம் குத்தின ஊசி இப்பதான் வேலையைக் காட்டத் தொடங்கியிருக்கு போல இருக்கு. எங்கட நிலைமை இப்பிடி எண்டால், குழந்தைப் பிள்ளையளுக்கு வாற நோய்களுக்கு இப்ப கடையளில மருந்தில்லை எண்டுறாங்களாம். ஆக மொத்தத்தில கூட்டத்தோட மனித இனத்தை அழிக்கிறதுக்கு வேலை செய்யுறாங்கள் போல இருக்கு.**

உணவே மருந்து எண்டு வாழ்ந்த தமிழன், மருந்தே உணவு எண்டு மாறினதுதான் எங்களுக்கு உள்ள பிரச்சனை. இனி யாரும் திருந்தப்போறதும் இல்லை, திருந்தி நல்லது இனி நடக்கபோறதும் இல்லை. எல்லாம் முடிஞ்சுபோச்சு.

சரி, அது ஒரு பக்கத்தால போகட்டும். இப்ப பிரச்சனை நடக்கிற இடமெல்லாம் தமிழர் இருக்கிறம், அல்லது தமிழர் இருக்கிற இடமெல்லாம் பிரச்சனை நடக்குது. குண்டு மழைக்குள்ள விழுந்து எழும்பி நாங்கள் உலகமெல்லாம் ஓடி ஓடி அலைஞ்சு இப்ப எங்க இடம் கிடைச்சுது அங்க அங்க வாழுறம். ஆனால் தமிழர் பண்பாடு மாறாமல் வாழுறம். பண்பாடு, வரலாறு என்றால் என்ன எண்டுறதெல்லாம் பலருக்கு இப்ப மறந்து போட்டுது கண்டியளோ. அது என்னவென்று இனி விளங்கப்படுத்த வேணும் பாருங்கோ.

எங்கட ஆட்களுக்கு எங்கட கலை, பண்பாடு எல்லாம் மறந்துபோச்சு. தைப்பொங்கலைக்கூட "தமிழ் மரபுரிமை விழா" எண்டும், சிவராத்திரியை "சிவ்தாண்டவம்" எண்டு மாத்தி பெரிய அலப்பறை எல்லாம் நடக்குது கண்டியளோ. அப்பிடியான கூத்துக்களை உள்வாங்கின அடுத்த தலைமுறை எடுத்ததுக்கெல்லாம் இந்தியாவுக்கு ஓடுது. சீலை வாங்குறதில இருந்து, சின்னம்மைக்கு மருந்து வாங்குறது வரைக்கும் இப்ப எல்லாமே இந்தியாதான் எங்கட ஆட்களுக்கு பாருங்கோ.

இப்ப கொஞ்ச நாளா இன்னும் கொஞ்சம் மேல போய், இந்தியாவில இருந்து திரைப்பட கலைஞர்களையும் இசையமைப்பாளர்களையும் கூட்டி வந்து தொடர் கூத்து நடத்துற வேலைகள் நடக்குது. உப்ப கிட்டடியில நரம்பு நாராயணன் ஒருத்தரைக் கூட்டி வந்து, பிரித்தானியாவிலும், பிரான்சிலும் ஆட்டம் போட்டது கண்டிருப்பியள். அடுத்ததாக அந்த நரம்படி நாராயணன் உங்க யேர்மனிக்கு வாறாராம். பிரித்தானியாவில நரம்படி நாராயணனோட ஆடுறதுக்கெண்டு அரைகுறை ஆடைகள் கட்டிக்கொண்டு ஈழத்தமிழ் பிள்ளையள் குத்தாட்டம் போட்டவையாம். இருக்கிறதே கொஞ்ச ஆடைதான், அதையும்

பிச்சு உதறி ஆடிச்சினமாம் எண்டு நண்பர் சொன்னார் பாருங்கோ. மானம் பஞ்சு பஞ்சாய் பறந்து போகட்டும் எண்டு ஆடினவையோ தெரியேல்லை. ஏத்தினது தான் ஏத்தினியள் கொஞ்ச ஈழத்தமிழ் ஆத்தைகள், மாமிகளையும் ஏத்தி விட்டிருக்கலாம். அவையும் நல்லா வளைஞ்சு நெளிஞ்சு ஆடியிருப்பினை.

இப்ப பகிடி என்னவெண்டால், அடுத்ததாக உங்க யேர்மனிக்கு நரம்படி நாராயணனும், அதுக்குப்பிறகு உவன் சங்கர நாராயணனும் வரப்போகினமாம். இப்பவே குனிஞ்சு நெளிஞ்சு மேடையில குத்துறதுக்கு எங்கட ஆக்கள் அணியமாக இருக்கினம் பாருங்கோ. தங்களைத் தவிர வேற யாரும் செய்யுற, சாதாரண மாவீரர் நினைவு நிகழ்வுகளுக்கு கலைஞர்கள் போகக்கூடாது எண்டு தடுக்கிற வெள்ளைச் சட்டை வீரசாமிகள் இப்பிடியான விடயங்களுக்கு வாய்திறவாயினம். ஏனெண்டால் அதையும் மீறி சனம் போகும் எண்டுறதும், இவர்களுக்கு அதை சொல்லி தடுத்து நிறுத்துற பலமும் இல்லை எண்டும் அவைக்கே தெரியும் பாருங்கோ.

இசை நிகழ்ச்சியை பாக்குறது கூட பறவாயில்லை பாருங்கோ. முன்னுக்கு இருந்து பாக்க முந்நூறு யூரோ, பின்னுக்கு இருந்து பாக்க வேறை விலை, எண்டு பலவிதமாக விற்பனைகள் நடக்குது பாருங்கோ. அதிலையும் இன்னொரு கொடுமையும் நடக்குது கண்டியளோ. நிகழ்வு நடந்து முடிஞ்ச பிறகு, இரவு இரண்டு மணி தொடங்கி விடிய ஆறு மணிவரை இருட்டறையில நடனம் ஆடப்போகினமாம். அதுக்கு வேற விலை கண்டியளோ. நரம்படி நாராயணன்களும் அதில கலந்துகொள்வார்களாம். சரி, போறதுதான் போறியள் இசை நிகழ்ச்சியை பார்த்திட்டு போங்கோ எண்டு பார்த்தால், இரண்டு மணிக்கு மேல இரவு நடனம் என்ன வேண்டிக்கிடக்கு பாருங்கோ. மாத வருமானத்தில அரைவாசி உந்த நிகழ்வோட போயிடும் பாருங்கோ. தென்னிந்தியாவில திரைப்படங்கள் போதாமையும், வருமானத்துக்கு வழியில்லாத காரணத்தாலையும் அவர்கள் இப்ப ஐரோப்பா கனடா எண்டு தமிழர்கள் வாழும் நாடுகள் நோக்கி படையெடுக்கிறாங்கள் பாருங்கோ. எங்கடையள் தங்களுக்குச் சாப்பிட வழியில்லாட்டிலும் அவங்களுக்கு அள்ளிக்கொடுக்கிறதில மனித நேய மிக்க சனம் பாருங்கோ.

எனக்கொரு கேள்வி பாருங்கோ, ஐரோப்பாவில இருக்கிற தமிழர்கள்




மட்டும்தான் இசையை அனுபவிப்பினமோ? ஏன் தமிழீழத்தில, தொடங்கி அந்தமான் வரைக்கும் இருக்கிற தமிழர்கள் இசையை அனுபவிக்காயினமோ? இழைத்த தெரியாமக் கேக்கிறன். ஏனெண்டால் பாருங்கோ அங்கையெல்லாம் போனால் யூரோவில காசை அள்ளமுடியாது பாருங்கோ. ரூபாயில வாற காசு அவைக்கு ஒரு நேரச் சாப்பாட்டுக்கு கூட காணாதாம் பாருங்கோ. நரம்படி நாராயணன் மட்டுமில்ல அவரின்ர கொப்பருக்கும், கொம்மாவுக்கும் சேர்த்துதான் போக்குவரத்து, தங்குமிடம் எல்லாம் குடுக்கவேணுமாம் பாருங்கோ. மேடையில கத்துறவர் தொடங்கி, பெத்தவர் வரைக்கும் ஈழத்தமிழர் காசு கட்டி அழவேணும் பாருங்கோ.

அதுக்குள்ளே பெரும்பகிடி என்னவெண்டால், ஏற்கனவே நரம்படி நாராயணனை பாக்க நுழைவுச் சீட்டு வாங்கின ஆக்கள், இப்ப சங்கர நாராயணன் வாறார் எண்ட உடன அங்க போறதுக்காக, வாங்கின நுழைவுச் சீட்டை மீளக் குடுத்து காசு வாங்கமுடியாமல் நிக்கினம். அதுமட்டுமில்லாமல், குடும்பத்தில நாலுபேர் நிகழ்வுக்கு போற எண்டால் அந்த மாத வீட்டு வாடகைக்கு எங்க போறது எண்டு ஒருத்தர் குமுறினார் பாருங்கோ. இதையெல்லாம் உணரும் நிலையில் எங்கட புதுத் தலைமுறை இல்லை கண்டியளோ.

இதே சனம்தான் பாருங்கோ; இருபது வருசத்துக்கு முதல், ஈழத்தின்ர போர்த்தளபதிகள் ஐரோப்பாவுக்கு வரேக்க தோளில தூக்கிக் கொண்டாடின சனம் கண்டியளோ. தமிழின அழிப்பு நடந்து 15 வருசம் கூட ஆகேல்லை, எல்லாத்தையும் மறந்து சனம் கேளிக்கை, கூத்துகளுக்குள்ள போட்டுதுகள். துருக்கியில வந்த நிலநடுக்கம் இங்கின வந்து துலையாதோ எண்டு நினைக்கவேண்டிக்கிடக்கு பாருங்கோ.

என்னவெண்டாலும் செய்து துலைக்கிறதெண்டால், செய்து துலையுங்கோ அறுந்துபோவாரே, ஏனடா தமிழினத்தைச் சுரண்டி அழிக்கிறியள்?

தன்னைப்போல பிறரை எண்ணும்
தன்மை வேண்டுமே
அந்த தன்மை வர உள்ளத்திலே
கருணை வேண்டுமே
பொன்னைப்போல மனம் படைத்தால்
செல்வம் வேறில்லை
இதை புரிந்து கொண்ட ஒருவனை போல்
மனிதன் வேறில்லை

- அப்ப வரட்டே







# ஈழத்தமிழர் மீது இந்தியாவின் அதிகாரப் பாய்ச்சல்

*1987ஆம் ஆண்டு, சூலை 29ஆம் நாள் இந்திய - இலங்கை உடன்பாட்டில் அன்றைய இந்திய தலைமையமைச்சர் இராசீவ் காந்தியும், இலங்கை குடியரசுத் தலைவர் செயவர்த்தனாவும் கையெழுத்திட்டனர். உடன்பாடு கையெழுத்திட்டப் பிறகு சுமார் 3 மாதம் கழித்து, இலங்கை அரசியல் யாப்பிற்கான 13 ஆவது சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. அரசியல் யாப்பில் 17ஆம் அத்தியாயத்தின் 'அ' பிரிவாகவும், உறுப்பு 154 'அ' பிரிவாகவும் இத்திருத்தம் சேர்க்கப்பட்டது. மாகாண சபை சட்டமும் இதே நாளில் நிறைவேற்றப்பட்டது.*

*தொன்றுதொட்டு ஈழத் தமிழர்களின் தாயகமான வடக்கு - கிழக்குப் பகுதிகளை இணைத்து, ஒரு மாகாணமாக உருவாக்குவது என்ற திட்டம் இந்திய - இலங்கை உடன்பாட்டில் முதன்மையாக இடம்பெற்றிருந்தது. இதையொட்டி சென்னை கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய தலைமையமைச்சர் இராசீவ்காந்தி "ஈழத் தமிழர்களின் நீண்ட கால கோரிக்கையான தமிழீழம் உருவாக்கப்பட்டு விட்டது" என்று தம்பட்டம் அடித்தார். ஆனால், உண்மையில் நடந்தது என்ன?*

*இந்திய - இலங்கை உடன்பாட்டில் கூறப்பட்ட முதன்மை வாய்ந்த அம்சங்களான தமிழர் தாயகப் பகுதியில் சிங்களர் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துதல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், தமிழர் பகுதியில் உள்ள சிங்கள காவலர்களையும், படை வீரர்களையும் திரும்பப் பெறுதல் போன்ற பலவற்றை சிங்கள அரசு நிறைவேற்றாத காரணத்தினால் மாகாண சபை தேர்தலை ஈழத்தமிழர்கள் புறக்கணித்தனர். ஆனால், இந்தியப் படைவீரர்களின் உதவியுடன் மோசடியான தேர்தல் நடத்தப்பட்டு, வரதராச பெருமாள் என்பவர் தலைமையில் அதிகாரமில்லாத அமைச்சரவை பதவியேற்றது.*

### அடிப்படைத் தவறுகள்

*ஈழத் தமிழர் பிரச்சனையைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட மாகாண சபைச் சட்டம் அடிப்படையிலேயே பல தவறுகளைக் கொண்டிருந்தது.*

*1. யாருடைய பிரச்சனையைத் தீர்ப்பதற்காக மாகாண சபை சட்டம் கொண்டு வரப்பட்டதோ, அந்தப் பிரச்சனைக்குரிய ஈழத் தமிழர் தரப்புடன் கலந்தாலோசனை செய்யாமலும், அவர்களின் பங்களிப்பு இல்லாமலும், ஒப்புதலைப் பெறாமலும் இச்சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டது.*

*2. இலங்கைக் கூட்டாட்சி நாடல்ல; ஒற்றையாட்சி நாடாகும். இலங்கை அரசியல்*

யாப்பின்படி "இலங்கை குடியரசு ஒற்றையாட்சி அரசாகும் என்பது தெளிவாகக் குறிக்கப் பட்டுள்ளது. இதைத் திருத்த வேண்டுமானால், நாடாளுமன்றத்தில் 2 / 3 பங்கு பெரும்பான்மையோடு அரசியல் யாப்புத் திருத்தம் நிறைவேற்றப்படுவதுடன், மக்களின் பொதுவாக்கெடுப்பு மூலமும் அவர்களின் ஒப்புதல் பெறவேண்டியது இன்றியமையாததாகும்" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

இலங்கையின் மக்கள் தொகையில் 75 சதவீதம் சிங்களரே!. 25 சதவீதம் தமிழர்கள். இந்நிலையில் நாடாளுமன்றத்திலும், நாட்டிலும் சிங்களரே பெரும்பான்மையினராக இருக்கும் நிலையில், இலங்கையைக் கூட்டாட்சி நாடாக மாற்ற வேண்டும் என்ற சட்டத் திருத்தம் ஒருபோதும் நிறைவேற்றப்பட முடியாததாகும். பொதுமக்களின் வாக்கெடுப்பின் மூலமும் ஒப்புதல் பெற முடியாது.

3. ஆனால், அரசியல் சட்டத்தின் 76ஆவது உறுப்பின் கீழ் கொண்டு வரப்படும் சட்டத் திருத்தத்திற்கு 2/3 பங்கு பெரும்பான்மை இருந்தால் போதும். இத்திருத்தம் குறித்து பொதுவாக்கெடுப்பு நடத்த தேவையல்ல. அன்றைய செயவர்த்தனா ஆட்சிக்கு 2/3 பங்கு பெரும்பான்மை இருந்தது. எனவே, 76ஆவது உறுப்பின்கீழ் அரசியல் சட்டத் திருத்தத்தை அவர் சுலபமாக நிறைவேற்றியிருக்கலாம். ஒற்றையாட்சி அரசான இங்கிலாந்து அரசு முறையில் வட அயர்லாந்து, சுகாட்லாந்து போன்ற பகுதிகளுக்கு அர்த்தமுள்ள அதிகாரப் பங்கீடு அளிக்கப் பட்டதைப் போல, வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு 76ஆவது சட்டத் திருத்தத்தின் கீழ் ஓரளவு அதிகாரத்தை வழங்கியிருக்கலாம். ஆனால், அதற்கான முயற்சிகளைச் செய்வதற்கு சிங்கள அரசு விரும்பவில்லை. அவ்வாறு செய்யும்படி அதை வற்புறுத்த இந்திய அரசும் தவறிவிட்டது.

4. 13ஆவது சட்டத் திருத்தம் தொடர்பாக இலங்கை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட போது, பெரும்பான்மை நீதிபதிகள் அரசியல் யாப்பு 76ஆவது உறுப்பின்படி நாடாளுமன்றத்திற்கு இருந்த அதிகாரங்களை இத்திருத்தம் கேள்விக்குட் படுத்தவில்லை எனத் தீர்ப்பளித்தனர். அதாவது, நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டே மாகாண சபை இயங்கவேண்டும் என்பதே இத்தீர்ப்பாகும்.

5. இலங்கையில் சிங்களர் - தமிழர் என இரு இனங்கள் வாழ்கின்றன. எனவே, மாகாணங்கள் அமைக்கும் போது இன ரீதியான அணுகுமுறை கடைப்பிடிக்கப் பட்டிருந்தால், சிங்களருக்கு ஒரு மாகாணமும், தமிழருக்கு மற்றொரு மாகாணமுமாக இரு மாகாணங்கள் மட்டுமே உருவாக்கப் பட்டிருக்க வேண்டும். ஏற்கெனவே மத்திய ஆட்சி, சிங்கள ஆட்சியாகவே உள்ளது. ஆனால், செயவர்த்தனா மிக தந்திரமாக பிரதேசங்களை அடிப்படையாகக் கொண்டு, சிங்களருக்கு எட்டு மாகாணங்களையும், தமிழருக்கு ஒரு மாகாணத்தையும் அளிக்கும் வகையில் ஒன்பது மாகாணங்களை உருவாக்கினார். ஆனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளை இணைத்து, ஒரு மாகாணமாக ஆக்குவது குறித்து 13ஆவது சட்டத்திருத்தத்தில் தெளிவாக எதுவும் கூறப்படவில்லை.

இணைப்புக் குறித்து நாடாளுமன்றம் ஒரு சட்டம் மூலம் நிறைவேற்றலாம் என்று கூறப்பட்டிருந்தது அல்லது குடியரசுத் தலைவர் ஒரு பிரகடனத்தின் மூலம் இணைப்பை ஏற்படுத்தலாம் என்று கூறப்பட்டிருந்தது. தற்காலிக இணைப்பிற்குக் கூட அரசியல் யாப்புத் தகுதி வழங்கப்படவில்லை. எனவே, பிற்காலத்தில் உச்சநீதிமன்றம் மூலம் இந்த இணைப்பு செல்லாததாக்கப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாணம் இரண்டாகப் பிரிக்கப் பட்டது. இவ்வாறு பிரிக்கப்பட்ட போது, இந்தியாவில் காங்கிரசு கட்சிதான் ஆட்சியில் இருந்தது. ஆனாலும்கூட இந்திய - இலங்கை உடன்பாட்டிற்கு சிறு எதிர்ப்பைக்கூட இந்திய அரசு தெரிவிக்கவில்லை.



6. இலங்கை மத்திய அரசுக்குரிய அதிகாரங்களும், மாகாண அரசுக்குரிய அதிகாரங்களும் திட்டவட்டமாக வரையறுக்கப் படவில்லை. இதன் விளைவாக மாகாண அரசுகள் மத்திய அரசின் ஆணைகளுக்கிணங்கவே செயற்படவேண்டி வந்தது. அப்பட்டமாகக் கூறினால் மாகாண அரசுகள் பொம்மை அரசுகளாகவே விளங்கின.

7. மாகாண அரசிடம் இருந்த அதிகாரங்கள் கூட ஆளுநருக்குக் கட்டுப் பட்டவையாக இருந்தன. அவரை மீறி மாகாண முதலமைச்சரோ, அமைச்சர்களோ செயல்பட முடியவில்லை. வடக்கு - கிழக்கு பிரிவும், புலிகளின் பின்னடைவும் சிங்கள அரசுக்கு மேலும் ஊக்கம் அளித்தன. முன்பு செய்யப்பட்டதைவிட, விரைவாகவும், அதிகமாகவும் தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன. மாவட்ட எல்லைகளைத் திருத்தியமைத்தல், முதலீட்டு முயற்சிகளுக்காகவும், இராணுவ முகாம்களுக்காகவும் நிலங்களை ஒதுக்குதல், சிங்கள மீனவர்களுக்கு வாடிகளை அமைத்தல், சிங்கள வணிகர்களின் கடைகளைத் திறத்தல் போன்றவை இராணுவ உதவியுடன் நிறைவேற்றப்படுகின்றன.

8. மாகாண சபைக்கு தன்னிச்சையாக சட்டம் இயற்றும் அதிகாரம் வழங்கப்படவில்லை. சட்ட முன் வடிவுகளை ஆளுநருக்கு அனுப்பி, அவரின் அனுமதியைப் பெறவேண்டும் என்ற நிலையில் அத்தகைய அனுமதி எளிதில் கிடைக்கவில்லை. அனுமதி பெற்றுச் சட்டங்களை நிறைவேற்றினாலும், ஆளுநரின் ஒப்புதலை பெறுவதிலும் பெரும் இடர்ப்பாடு உருவானது. ஆளுநர் ஒப்புதல் கொடுத்தாலும் அச்சட்டங்களை உச்சநீதிமன்றத்தின் பரிசீலனைக்குக் குடியரசுத் தலைவர் அனுப்பலாம்.

9. மாகாண முதலமைச்சரின் ஆலோசனைப்படி காவல்துறைத் தலைவரை, ஆளுநர் நியமிக்க வேண்டும். ஆனால், இதில் முரண்பாடு தோன்றுமானால், குடியரசுத் தலைவரே அந்த நியமனத்தை மேற்கொள்வார். இதன்மூலம் காவல்துறையின் அதிகாரம் முதலமைச்சரிடமிருந்து பறிக்கப்பட்டது.

10. குறிக்கப்பட்ட கல்வி நிலையங்களைத் தவிர, ஏனைய கல்வி நிலையங்கள் அனைத்தும் மாகாண அரசின் அதிகாரத்திற்குட்பட்டதாக இருக்கும் எனக் கூறப்பட்டது. ஆனால், குறிக்கப்பட்ட கல்வி நிலையங்கள் சிறிது சிறிதாக தேசிய கல்வி நிலையங்களாக அறிவிக்கப்பட்டு, மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டன. மற்றும் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் என அறிவிக்கப்பட்டது. இவற்றில் மாகாண அரசுக்கு எந்த அதிகாரமும் கிடையாது.

11. நிலம் தொடர்பான அதிகாரம் மத்திய அரசிடம் இருக்கும் என அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ளது. எனினும், நிலங்களைப் பயன்படுத்தும் உரிமை மாகாண அரசிடம் அளிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், மத்திய அரசின் கொள்கைக்கு ஏற்பவே மாகாண அரசு நிலத்தைப் பயன்படுத்த வேண்டும் எனக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய அரசுக்குத் தேவையானால் நிலங்களை எடுத்துக்கொள்ளும் அதிகாரம் உண்டு. நிலத்தின்மீது அதிகாரம் இல்லாமல் ஒரு தேசிய இனம் தனது பொருளாதார நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது. இத்தகைய கட்டுப்பாடுகளின் விளைவாக தமிழர் பகுதியில் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்க மாகாண அரசினால் இயலாமல் போய்விட்டது.

12. நீதித்துறை அதிகாரப் பகிர்வுக்கு உட்படுத்தப்படவில்லை. மத்திய அரசின் நீதித்துறையின் கட்டுப்பாட்டின் கீழேயே மாகாண நீதித்துறை நீடிக்கிறது. மாகாண அரசுக்கும், மாகாண மேல் நீதிமன்றத்திற்கும் எத்தகைய தொடர்பும் இல்லை.

13. இலங்கையின் இணை ஆட்சி மொழியாக தமிழ் விளங்கும் என அறிவிக்கப்பட்டாலும், இன்று வரையிலும் அது நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை. மேற்கண்ட யதார்த்த உண்மைகளைச் சிறிதளவுகூட உணராமல் இந்திய அரசு 13ஆவது சட்டத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும் என சிங்கள அரசிடம் வற்புறுத்தி வருகிறது. இந்தியாவின் நிலைப்பாட்டையொட்டி மேற்கு நாடுகளும் இக்கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. இலங்கை இனப் பிரச்சனைக் குறித்தோ, 13ஆவது சட்டத் திருத்தம் குறித்தோ சிறிதளவுகூட புரிந்துகொள்ளாமல் இந்நாடுகள் செயல்படுவது என்பது, போகாத ஊருக்குப் புரியாத வழியைக் காட்டுவதாகும்.

13ஆவது திருத்தம் குறித்து சிங்கள ஆய்வாளர்கள் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். இலங்கை இனப் பிரச்சனையின் தீர்வுக்கு 13ஆவது திருத்தம் எந்த வகையிலும் உதவாது, சற்றும் பொருத்தமற்றது என அக்கட்டுரைகளில் வலியுறுத்தியுள்ளனர். 13ஆவது திருத்தம் பல்வேறு குறைபாடுகளைக்

கொண்டது. இலங்கை இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்குத் தேவையான அதிகார அலகோ, பகிர்வு அதிகாரங்களோ, கூட்டு அதிகாரங்களோ, அதிகாரங்களுக்கான பாதுகாப்போ எதுவும் இல்லாததாகும். இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்ட ஈழத் தமிழர்களைக் கலந்து ஆலோசித்து, இத்திருத்தத்தை முன்மொழிந்திருந்தால் மேலே கூறப்பட்ட குறைபாடுகளை அகற்றியிருக்க முடியும். ஆனால், ஈழத் தமிழர்களை முற்றிலுமாகப் புறக்கணித்துவிட்டு அன்றைய இந்திய தலைமையமைச்சர் இராசீவ்காந்தி இலங்கையுடன் உடன்பாடு செய்துகொண்டார்.

இந்தியா போன்ற சில நாடுகளில் பல்வேறு தேசிய இனங்கள் வாழ்ந்தாலும், எந்தவொரு தேசிய இனமும் மிகப் பெரும்பான்மையாகவோ அல்லது மிகச் சிறுபான்மையாகவோ இருக்கவில்லை. எனவே, ஏதாவது ஒரு தேசிய இனம் பாதிக்கப்படும் போது, அந்த இனத்துடன் சேர்ந்து மற்றும் பல தேசிய இனங்களும் குரல் கொடுக்கின்றன. அதன் விளைவாக உருவாகும் அரசியல் அழுத்தம் இந்திய அரசை செயல்பட வைக்கிறது.

ஆனால், இலங்கையில் அதற்கான சாத்தியக் கூறுகள் அறவே இல்லை. அங்கு நிரந்தர பெரும்பான்மையினராக சிங்களரும், தமிழரும் உள்ளனர். இலங்கை அரசும், சிங்கள அரசாகவே அமைந்துள்ளது. அந்த நாட்டின் குடியரசுத் தலைவராகவோ, தலைமையமைச்சராகவோ ஒரு தமிழர் எக்காலத்திலும் வர இயலாது. ஆனால், இந்தியாவில் சிறுபான்மை மதமான சீக்கியர்களில் ஒருவரான ஜெயில் சிங் குடியரசுத் தலைவராகவும், மற்றொரு சீக்கியரான மன்மோகன் சிங் தலைமையமைச்சராகவும் வர முடிந்துள்ளது. மற்றும் சிறுபான்மை மதமான முசுலீம்களில் ஜாகிர் உசேன், பக்ருதீன் அலி அகமது, அப்துல் கலாம் ஆகிய மூன்றுபேர் குடியரசுத் தலைவர்களாகப் பதவி வகிக்க முடிந்துள்ளது. மேலும், இந்திய அமைச்சர்களாக, அதிகாரிகளாக, மாநில அமைச்சர்களாக, அதிகாரிகளாகவும் இந்திய இராணுவத்தில் உயர் தளபதிகளாகவும் சிறுபான்மை மதங்களைச் சேர்ந்தவர்கள் வருவதற்கு எவ்விதத் தடையும் இல்லை. ஆனால், இலங்கையில் இதற்கு நேர் மாறாக உயர் பதவிகளில் எதிலும் தமிழர்கள் நியமிக்கப் படுவதில்லை.

ஈழத் தமிழர்கள் 100 ஆண்டு காலத்திற்கு மேலாக இனப்படுகொலைக்கு ஆளாகி வந்தபோதிலும், இந்தியாவோ அல்லது உலக நாடுகளோ அல்லது ஐ.நா. பேரவையோ அவர்களைப் பாதுகாக்க முன்வரவில்லை. வெறுமனே வாய்ச்சொல்லில் வெளியிடப்படும் அறிக்கைகளைப்போல உத்தரவாதமற்றதே இந்த 13 எனும் கோளாறுபதிகம் இந்தியாவினது.







CENTURY
TRAVELS

Rheinische Str.29-44137-Dortmund

0231 58 96 557 | 0231 55 74 319

www.centurytravels.de    info@centurytravels.de


Melliyalsarees
சித்திரைப் புத்தாண்டை
முன்னிட்டு
03.03.2023 முதல்
04.04.2023 வரை
Freeze
SALE
+49 176 24650540
Rheinische Strasse 29
DORTMUND
மெல்லியள்
சாரிஸ்
மலிவு
விற்பனை